

786/92

# சாஹெப் தர்கா

ISHQ-E-RASOOL ﷺ IS THE SOUL OF IMAN.

ரஸூலுல்லாஹ்வை நேசிப்பது ஈமானின் உயிர்.

படிக்க...! நாட்டை நேசிப்பது ஈமானின் அங்கம் பாதுகாக்க...!!

کونین کی دولت ہے درگاہ اولیاء میں
اللہ کی رحمت ہے درگاہ اولیاء میں
آنے سے یہاں ہم کو ملتا ہے خدا حافظ
کیا جلوۂ قدرت ہے درگاہ اولیاء میں

உருஸ் 19
இதழ் 15

ரம்ஜானுல் முபாரக் – 1431
செப்டம்பர் – 2010

நன்கொடை : ரூ. 5/-
ஆண்டு சந்தா : ரூ. 50/

## இதழின் உள்ளே ......

கௌஸுல் வரா... 2
முஹ்யித்தீன் ஆண்டகை நோற்ற நோன்புகள்... 3
திருமறையின் தெளிவுரை... 5
ஈது பெருநாள் அன்று என்ன செய்ய வேண்டும்...? 6
புதையல்... 7
தர்காவின் புணர் நிர்மாணம் 8
மாநபியின் மணிமொழிகள்.. 9
ஒட்டகனார் கமெண்ட்ஸ்...! 10
வலிமார்களைப் பற்றி வேண்டாம் டி.வி.சீரியல்... 11
ஒரு பகிரங்க கடிதம்... 13
ஜியாரத் பயணம்...! 14
ஆறு நோன்புகள்...! 15
அவுலியாக்கள் – நோன்புகள் 16
ஈடேற்றம் பெற பிரார்த்தனை 17
நாயகத்தின் பெற்றோர்கள் 18
பெருநாள் சட்டங்கள்...! 19
வழி கெட்ட மௌதூதியின் நூல்களுக்கு தடை...! 20

Owned and Published by
M.SYED AHMED, M.A.,
74/176- A, Ist Floor, Ghandiji Road,
opp - Erattai Mastan Dargah,
Thanjavur - 613001
e-mail : dargah_tnj@yahoo.com
www.sahebdargah.org

Printed by
Manickam Printers,Door No : 999,
South East Rampart,
Thanjavur - 613001

RNI No. TNTAM/2009/30120
Rnp No. SSP/TJ/29/10-12/TJI
Posted On 5th day of the
Month at Thanjavur H.O.

அடுத்த வெளியீடு : நவ் -2010
Please Visit :
www.aulia-e-hind.com

*நாரயே தக்பீர்! அல்லாஹு அக்பர்!!* *நாரயே ரிஸாலத்! யா ரஸூலல்லாஹ்!!* *நாரயே விலாயத்! யா முஹ்யித்தீன்!!*

## இஸ்லாத்தில் புனித கொடிகள்...!

உலகின் ஒவ்வொரு நாட்டின் முதன்மை அடையாளமாகக் கருதப்படுவது அந் நாட்டின் தேசியக் கொடியே. அக்கொடியை யாரேனும் அவமதித்தாலோ, மரியாதை குறைவாக நடந்து கொண்டாலோ எந்த நாடும் சகித்துக்கொள்ளாது என்பது இன்டர்நேஷனல் லா, இது ஏகோபித்த உலகளாவிய சட்டமாகும்.

இந்த சட்டத்தை இஸ்லாமிய ஷரீஅத்தும் ஏற்றுக் கொள்வது மட்டும் அல்லாது தனக்கான கொடிகளின் புனித சட்டத்தைக் கொண்டுள்ளது. இதற்காக குர்ஆன், ஹதீஸ், இஜ்மா, கியாஸ் என்று வரையறுக்கப்பட்ட சட்டங்களின் மாமேதைகளான நான்கு இமாம்களும், அகீதா கொள்கைகளை வரையறுத்த இமாம் மாதுரிதி ஹனஃபி, அபுல் ஹஸன் அலி அஷ்அரி ஷாஃபயி, கல்விக் கடல் இமாமுனா கஜ்ஜாலி போன்ற நாதாக்களும், சுன்னத் வல் ஜமாஅத் அகீதா கொள்கைப்படி கொடிகள் ஏற்றுவது நல்லமல்களைச் சார்ந்தது என்று நிறுவியுள்ளார்கள்.

புனித கொடிகளுக்கு ஆதாரங்களாக பற்பல சம்பவச் சான்றுகள் குர்ஆன், ஹதீஸ் வரலாறுகளில் பரவிகிடக்கின்றன. அவைகளில் முக்கியமான சிலவற்றை மட்டும் இங்கு ஆதாரப்படுத்துகின்றோம்.

ஆதம் அலா நபியினா அவர்களின் புனித ரூஹ் என்ற ஆன்மா உலகை துறந்து ஜன்னத்திற்கு மலக்குகள் கோமான் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அழைத்துச் சென்றபோது....

சொர்க்கம் ஜீனத்தாக்கப்பட்டது. மலாயிகத்துக்கள் எல்லாம் சிறகையும், கொடியையும் விரித்துக் கொண்டு ஆதம் அலைஹிஸ் ஸலாம் ரூஹுக்காக கொடிபிடித்து நின்றதும்...

ஆதம் அலைஹிஸ் ஸலாம் தலையை உயர்த்திப் பார்த்தார் அவருடைய தலை தொடுத்து வானமளவும் மலாயிகத்துக்கள் சிறகை விரித்துக்கொண்டு கையிலே கொடி பிடித்துக் கொண்டு நிற்பவர்களாக கண்டார்கள். (ஆதாரம் : பெரிய கஸஸுல் அன்பியா, பக் :57)

நபிகள் கோமான் எம்பெருமானார் கண்மணி நாயகம் அவர்களின் புனித மீலாது ஜனனத்தின் போது பீவி ஆமினா ரலியல்லாஹு அன்ஹா அம்மையார் கண்டதாக வரலாறு பதிவு செய்து உள்ளது இதோ....

“என்னுடைய பார்வையில் மூன்று கொடிகள் தெரிந்தது அக்கொடிகளோ பச்சை நிறமுள்ளதாக இருந்தது. அதில் ஒரு கொடி எழுவானிலும், ஒரு கொடி நடுவானிலும், ஒரு கொடி காபதுல்லாஹ்வின் பேரிலும், பிடிக்கப்பட்டதாய் இருக்கும்படி கண்டேன்!”

(ஆதாரம் : இரத்தின முஹம்மது காரண சரித்திர வசன ரூபகம், பக் : 47, அச்சு : 1947)

லைலத்துல் கத்ரு இரவிலே மக்ரிபு பாங்கிற்குப் பின் கோடிக்கணக்கான மலக்குகள் வானவர் கோமான் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் தலைமையில் மூன்று கொடிகளை ஏந்தி வந்து ஒரு கொடியை புனித மிகு காபதுல்லாஹ்விலும், ஒரு கொடியை மேன்மை மிகு மதீனாவிலும், ஒரு கொடியை சங்கை மிகு பைத்துல் முகத்தஸிலும் நட்டு வைத்து அவ்விரவிலே முஸ்லிம்களின் இபாதத்துக்களையும், செய்யும் நல் அமல்களையும், சேகரித்து பஜர் பாங்கு நேரத்திலே திரும்புவதாக சூரத்துல் கதர் அத்தியாயத்தின் தப்ஸீர் விரிவுரையில் ஹகீமுல் உம்மத் அல்லாமா அஹ்மத் யார்கான் வரைகிறார்கள். (ஆதாரம் : கன்ஜுல் ஈமான் குர்ஆன் விரிவுரை)

விரிவிற்கு அஞ்சி ஒரு சில ஆணித்தரமான ஆதாரங்களை சமர்பித்துள்ளோம். இவைகள் மட்டுமின்றி பல நூறு ஆதாரங்களை கொண்டுதான் நம் முன்னோர்களும்,

மூதாதையர்களும் இறைநேசச் செல்வர்களான வல்ல வலிமார்களின் புனிதங்கள் பூத்துக் குலுங்கும் உருஸ் தினங்களின் அறிவிப்பாக தர்காக்களில் கொடிகள் ஏற்றுவதும், அந்தந்த வலிமார்களின் மாதங்களிலே தத்தம் வீடுகளிலே கொடிகள் ஏற்றி ‘‘யா அல்லாஹ் இந்த வலியுல்லாஹ்வின் பொருட்டால் நாங்கள் ஏற்றிய கொடியின் பரக்கத்தை எங்கள் வீடுகளில் இறக்கி வைத்து, பலா முஸீபத்துக்களை எங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றுவாயாக!’’ என்று துஆ கேட்பது வாழையடி வாழையாக நடைமுறையில் உள்ள ஆகுமானே செயல் என்றே இஸ்லாமிய சமூகம் நாளது வரை கடைபிடித்து வந்திருக்கிறது.

எனவே தான் வலிமார்களின் கோமான் ஆன்மீக பேரரசர் விலாயத் வேந்தர் மெய்ஞான ராஜமகுட தவராஜ ராஜர் தீன் தீன் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்கள் தமது ‘‘சாகானில் ஹூப்பு’’ என்ற தன் மெய்ஞான ரகசிய வெளிப்பாட்டு கஸீதா கவிதையில் இறுதி நாள் மஹ்ஷர் மைதானத்தில் என்னுடைய கொடி பட்டொளி வீசி பறக்கும், என்பதாக வீர திருமுழக்கம் இடுகிறார்கள்.

(ஆதாரம் : சகானில் ஹூப்பு தமிழ் கஸுதா கவிதை – முஹ்யித்தீன் அடிமை)

அஜ்மீர் காஜா நாயகம் அவர்களுக்கும், தமிழகத்து பாதுஷாவாம் காதர்வலி கஞ்சே சவாயி கஞ்ஜ்பக்ஷ் நாகூரி அவர்களுக்கும், ஏர்வாடி இப்ராஹீம் பாதூஷா அவர்களுக்கும், முத்துப்பேட்டை ஷேக் தாவூத் அவுலியா அவர்களுக்கும் இன்னும் பிற லட்சோப லட்ச அவ்லியாக்களின் கூற்றின் படி காதிரிய்யா, சிஷ்திய்யா, நக்ஷபந்தியா, சுஹ்ரேவர்தியா ஆகிய தரீகாக்களில் அந்தந்த வண்ணங்களைச் சார்ந்த கொடிகள் ஏற்றுவது ஆகுமானது, கூடும் என தமிழகத்து இன்றைய அரசு தலைமை காஜியார் ‘‘கிதாபுர் ராயாதி லி சலாசிலிஸ் சூஃபியா அல் முசம்மா மன்ஷூரில் கிலாபதி வத் தஸ்தூரில் மஷீகா’’ كتاب الرّايات لسلاسل الصوفية المسمّى منشور الخلافة و دستور المشيخة என்ற பத்வா நூல் கோர்வையிலே நபிகள் கோமான் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் நான்கு கலீஃபாக்கள், அஹ்லே பைத்துக்கள் மற்றும் வலிமார்கள் அவரவர்களின் சில்சிலாபடி எந்த வண்ணங்களில் எந்த வலியுல்லாஹ்வின் கொடி இருந்தது என்பதை சுமார் 150 பக்க அரபி நூலிலே கோர்வை செய்து உள்ளார்கள். (நூல் கிடைக்குமிடம் : தமிழ் நாடு அரசு தலைமை காஜியார் மௌலானா மௌலவி காஜி சலாஹுத்தீன் முஹம்மது அய்யூப் 323, தீவான் பாக், டிடிகே ரோடு, ராயப்பேட்டை, சென்னை – 14)

இந்த ஆதாரங்களுக்கு எல்லாம் மகுடம் வைத்தார்போல் ‘‘ஜவாயிதில் மனாகிப்’’ என்ற ஹதீது கிரந்தத்தில் பதியப்பட்ட கொடி ஹதீஸுடன் நிறைவு செய்கிறோம்...

மஅதூஜ் பின்யஜீதுல் ஹந்தலி அவர்கள் கூறுகிறார்கள் ‘‘நபிகள் கோமான் இஸ்லாமியர்களான எங்களுக்கு மத்தியில் சகோதரத்துவத்தை நிலைநிறுத்த அலியைப் பார்த்து கூறினார்கள்... ஓ அலியே! நீர், நபி ஹாரூன் எப்படி நபி முஸாவிற்கு சகோதரரோ அப்படி நீர் எனக்கு சகோதரர் ஆவீர். ஆனால் நீர் நபி இல்லை!’’

என்ன உமக்கு தெரியாதா? நீர் அறியமாட்டீரா? கியாம நாளிலே எல்லோருக்கும் முதன்மையாய் நான் அழைக்கப்படுவேன். அர்ஷின் வலப்புறத்தில் என்னை அல்லாஹ் நிற்க வைத்து சொர்க்கத்திலிருந்து பச்சை உடையை அணிவிக்கச் செய்வான்.

பின் என் உறவின் முறையின் நெருக்கத்தின் காரணமாக நீர் அழைக்கப்படுவீர். எனது லிவாவுல் ஹம்து என்னும் பெருங் கொடி உம்மிடம் ஒப்படைக்கப்படும். நீர் கொடியை ஏந்தி இரண்டு சஃப்புகளாக சமூகங்களுக்கு மத்தியில் ஊர்வலமாக நபி இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாமிடம் வருவீர். ஆதம் நபியிலிருந்து அத்தனை சமூகங்களும் என் கொடியின் நிழலில் பாதுகாவல் தேடும். அக்கொடியின் நீளம் ஓராயிரம் ஆண்டு கால பாதையாய் இருக்கும். அதன் கம்பம் வைரத்தால் ஆனதாய் இருக்கும். அதை கட்டுவதற்கு நூரான ஜோதியால் மூன்று கயிறுகள் இருக்கும். அக்கொடியில் மூன்று வரிகள் எழுதப்பட்டிருக்கும். முதல் வரியில் பிஸ்மில்லாஹ் ஹிர்ரஹ்மானிர் ரஹீமும், இரண்டாவது வரியில் அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீனும், மூன்றாவது வரியில் லா இலாஹா இல்லல் லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்வும் எழுதப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு வரியின் நீளமும் அகலமும் ஓராயிரம் ஆண்டு கால தூரமாய் இருக்கும் அப்புனித கொடியை நீர் பிடித்தவராய் வலப்புறத்தில் இமாம் ஹஸனும், இடப்புறத்தில் இமாம் ஹுஸைனும் இருப்பார்கள். அக்கொடியை ஏந்திய வண்ணம் எனக்கும் நபி இப்ராஹீமுக்கும் இடையில் அர்ஷின் கீழ்வந்து நீர் நிற்பீர். உமக்கு அவ்வேளையில் சொர்க்கத்தின் பச்சை உடுப்பு உடுத்தப்படும் என்றார்கள்.

ஆதாரம் : அஸுஹ்ஹுல் மதாலிப் ஃபீ அததி மனாகிபி அஸதுல்லாஹில் காலிப், பக் : 535

ஆக இக் கருத்துக்கள் மூலம் தெரிய வருவது இஸ்லாத்தில் புனித கொடிகளை சங்கைப்படுத்துவது ஆகுமானதே. எனவே கொடிகளை ஷிர்க் என்றும், பித்அத் என்றும், ஒன்று இரண்டாகி, இரண்டு நான்காகி, நான்கு நாற்பதாகி ஆளுக்கு ஆள் தான் தோன்றித்தனமான கலர் கலராய் கொடிகளை உருவாக்கி, நட்ட நடு ரோட்டில், பட்டப் பகலில், பெண்களின் கைளில் கூட கொடிகளைக் கொடுத்து போராட்டம் என்ற பெயரில் கொடிகளை அரசியலாக்கி, அவமதிக்கும் தப்லீகிய தவ்ஹீதிய வஹ்ஹாபிகள் வலிமார்களின் புனிதங்களான இஸ்லாமிய கொடிகளைப் பற்றிப் பேச அருகதை அற்றவர்களே. ஆகவே வஹ்ஹாபிய வாய் சவடால்களுக்கு, விதண்டா வாதங்களுக்கு நாம் செவி சாய்க்காமல் வலிமார்களின் புனித இஸ்லாமிய தர்கா கொடிகளை ஏற்றுவோம்! போற்றுவோம் !! முன்னோர் வழி நடப்போம்!!!

சிந்திப்போம்! செயல்படுவோம்!! வஸ்ஸலாம்!!!

---


786/92

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மதுல்லாஹி வ பரகாத்துஹு

புது யுகத்தின் தேவைகளுக்கு ஈடு கொடுக்கும் ஓர் எழுச்சி
சுன்னத் வல் ஜமாஅத் கொள்கையுடன் நடக்க அறிய முயற்சி

**கௌஸியா எஜுகேஷனல் இன்ஸ்டிடியூட்**

**அல் ஜாமிஅதுல் கௌஸுல் வரா**

உங்கள் ரம்ஜான் ஜக்காத், சதகா, ஃபித்ராக்களை GAUSIYA FOUNDATION என்ற பெயரில் M.O அல்லது D.D மூலமாக அனுப்பி ஏழை மாணவர்களுக்கு உதவலாமே!

**பெற்றோர்களே!**

**உங்கள் பிள்ளைகள் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவரா? திருக் குர்ஆனை சரளமாக ஓத வேண்டுமா?**

இந்நிறுவனம் இஸ்லாமிய சுன்னத் வல் ஜமாஅத் மார்க்க நெறிமுறைகளை நவீன முறையில் போதிக்கும நிறுவனமாகும்.

**நோக்கம்...!**

தற்கால அறிவியல் பாணியில் பன் மொழிப் புலமையுடன் சூஃபியத்தின் சன் மார்க்க சமாதான போதனைகளை மக்களின் முன்னிலையில் எடுத்துக் கூற எதிர் கால இளம் சமுதாயத்தினரை தயார் படுத்துவதாகும்!

**முக்கிய சிறப்பம்சங்கள்...!**

குர்ஆன் மனனம் – ஹப்ளு. அரபி, உருது, பார்ஸி ஆகிய மொழிகளில் மௌலவி ஜும்ராக்களில் தஹ்ஸீல் பட்டம் பெறும் மாணவர்களுக்கு இலவசமாக உணவு, உடை, தங்கும் இடம் அனைத்தும் தரப்படும்!

**தொடர்பு கொள்க...!**

GAUSIYA FOUNDATION,
GAUSIYA HOUSE,
24, EAST WEST KAMARAJAR STREET,
K.K.NAGAR, MADURAI
CELL : 98940 37055, 90421 70262.

அனல் வாஹிதுல் ஃபர்துல் கபீரு பீ ஜாத்திஹி...!

# ஏகப் பரம்பொருளில் திளைத்து முஹ்யித்தீன் ஆண்டகை நோற்ற நெடும் நோன்புகள்...!

**குர்ஆன் கூறும் நோன்பு...**

***யா அய்யுஹல்லஜீன ஆமனூ குதிப அலைகுமுஸ் ஸியாமு கமா குதிப அலல் லஜீன மின் கப்லிகும் லஅல்லகும் தத்தகூன்.***

விசுவாசிகளே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த வண்ணமே உங்கள் மீதும் நோன்பு நோற்பது விதிக்கப்பட்டிருக்கிறது. (இதனால்) நீங்கள் தூய்மையாளர்கள் ஆகலாம். (சூரா பக்ரா : 183)

இந்த திருகுர்ஆன் வசனத்தின் மூலம் நாம் ஒரு உண்மையை புரிந்துகொள்கிறோம்.

இந்த நோன்பு கடமை புதிதாக நம் மீது மட்டும் விதிக்கப்படவில்லை- இதற்கும் முன்னால் - அதற்கும் முன்னால் - மனிதகுலம் தோன்றிய காலத்திலிருந்தே - ஆதி மனிதர் பாவா ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் காலத்திலிருந்தே - ஒவ்வொரு கால கட்டத்திலும் இந்த நோன்புக் கடமை தொடர்ந்திருந்து வருகிறது. இனியும் தொடரும்.

**அற்புத சஹ்ரும், அதிசய இஃப்தாரும்...**

பல்லாயிரம் ஆண்டு கால நோன்புகளில் - பல கோடி மக்களின் நோன்புகளில் - கோடி கோடி கணக்கான சஹர் நிகழ்ச்சிகளும், இப்தார் நிகழ்ச்சிகளும் நடைபெற்றுள்ளன. இவை எல்லாவற்றிலும் எந்த காலத்திலும் வேறு எந்த மனிதரின் நோன்பிலும் இல்லாத - இல்லவே இல்லாத ஒரு ஒப்பற்ற தனித்தன்மை ஆன்மிகப் பேரரசர் - விலாயத் வேந்தர் மெய்ஞான ராஜமகுட தவ ராஜ ராஜர் ஆருயிர் இரட்சகர் - அகமிய புரட்சித் திலகம் எஜமான் **முஹ்யித்தீன் அப்துல் காதர் ஜீலானி ஆண்டகை** அவர்களின் நோன்பில் மட்டும் தான் இருந்தது!

ஆம் - கி.பி 1078ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் தேதி ஹிஜ்ரி 471ஆம் ஆண்டு புனித ரமலான் முதல் நாள் திங்கட்கிழமை அதிகாலை **முஹ்யித்தீன் எஜமான்** அவர்கள் தங்கள் அன்னை **உம்முல் கைர் ஃபாத்திமா அவர்களின் மகத்தான மணிவயிற்றில் சஹர்** செய்து நோன்பு நோற்றவர்களாக - நோன்பாளியாகவே அன்று காலை அவதரித்தார்கள். பிறந்த நேரத்திலிருந்தே அன்று மாலை வரை- நோன்பு திறக்கும் நேரம் வரை வாய் திறந்து பால் அருந்தாமலே நோன்பிருந்து அன்று மாலை மிகச் சரியாக இஃப்தார் நேரம் வந்த பிறகு தான் வாழ்நாளில் முதல் முறையாக வாய் திறந்து பால் அருந்தி **மாதாவின் மலரடியிலே இப்தார்** செய்து நோன்பு திறந்தார்கள்.

இப்படி பிறக்கும் முன்பே மாதாவின் மணிவயிற்றில் சஹர் செய்து பிறந்த அன்று மாலை மாதாவின் மலரடியில் இஃப்தார் செய்தவர்கள் எந்த காலத்திலும் - எந்த வரலாற்றிலும் வேறு யாரும் இல்லவே இல்லை!

இது இறைஞானப் பேரொளி **முஹ்யித்தீன் எஜமான்** அவர்களுக்கு மட்டுமே உள்ள ஈடு இணையற்ற தனித்தன்மை!

**40ஆண்டுகால நெடும் நோன்பு...**

★ அகமியப் புரட்சித் திலகம் அண்ணல் **முஹ்யித்தீன் அப்துல் காதர் ஜீலானி ஆண்டகை** அவர்கள் தங்கள் வாய்மை வரலாற்றில் யாரும் நோற்காத மகத்தான 40 ஆண்டுகால நெடும் நோன்பை நோற்றிருக்கிறார்கள்.

★ பிறந்தது முதல் 10 வயது வரை தங்கள் அன்னையின் அரவணைப்பில் அமுதமும் உணவும் அனுதினமும் சீராக உண்டிருக்கலாம் - அதன் பின் -

**என்னுடைய 10வது வயதில் நான் இறைவனால் விரும்பப்பட்ட ஒரு அடியான் என்பதைப் புரிந்து கொண்டேன், அதிலிருந்து வஹ்தத்துல் உஜீத் என்ற மெய்நிலையில் உறுதியாக நின்றேன்! என்று மெய்ஞான திலகம் முஹ்யித்தீன் எஜமான் திருவாய் மலர்ந்தருள்கிறார்கள்.**

**வஹ்தத்துல் உஜுத் என்ற ஒப்பற்ற உயர் நிலையில் - ஏகத்துவ பரிபூர்ண பேருணர்வில்** உறுதியாக நிற்பது என்பது எளிதான காரியமா - கடினமான காரியமா என்பதெல்லாம் இல்லை- எல்லோராலும் இயலாத காரியம் என்றே சொல்ல வேண்டும்!

**வஹ்தத்துல் உஜுத் அத்வைதம்**- அனைத்தும் ஒன்றே என்ற ஏகத்துவ பார்வை ஒன்றே அனைத்தும் - அனைத்தும் ஒன்றே - நோக்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் அனைத்தும் ஒன்றே - அந்த ஒன்றைத் தவிர மற்றொன்று இல்லவே இல்லை

பார்க்கும் மனிதனும் - அவன் பார்க்கும் கண்களும் - அவனால் பார்க்கப்படும் பொருள்களும் அனைத்தும் ஒன்றே!

அல்லாஹ் ஒருவனுக்கு மற்றொன்றை இணையாகப் பார்ப்பது ஷரீஅத்தில் இணை வைக்கும் ஷிர்க் என்ற குற்றம் - அந்த அல்லாஹ் ஒருவனைத் தவிர மற்றொன்று இருப்பதாக நினைப்பதே தரீகத்தில் (ஞான நோக்கில்) மிகப் பெரிய குற்றம்!

அவனின்றி அணுவும் அசையாது என்பது **ஷரீஅத்** - அவனல்லாத அணுவும் இல்லை என்பது **தரீகத்!**

எல்லா திசைகளிலும் - எல்லா பொருள்களிலும் அவன் இருக்கிறான் என்பது பாதி உண்மை - எல்லா திசைகளும் அவனே - எல்லா பொருட்களும் அவனே என்பது தான் முழு உண்மை!

**லைஸ ஃபித்தாரைனி இல்லாஹு!**

பிரபஞ்சம் அனைத்திலும் - அண்ட சராசரங்களிலும் அல்லாஹ் அல்லாத ஒரு அணுவும் இல்லை என்று அஹ்மது அஹமதுமான அண்ணல் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருள்கிறார்கள்!

இஸ்லாத்தின் மூல மந்திரமான லா இலாஹா இல்லல்லாஹு என்பதில் லா என்றால் இல்லை இல்லல் லாஹு என்ற அல்லாஹ்வைத் தவிர வேறு எதுவும் இல்லவே இல்லை என்பது தான் அடிப்படை பொருள்!

அல்லாஹ்வைத் தவிர எதுவும் இல்லை எங்கும் இல்லை - எல்லாம் அவனே - அனைத்தும் அவனே என்ற ஏகத்துவம் - என்ற **வஹ்தத்துல் உஜுத்** என்ற வார்த்தையை பேசுவதும் கேட்பதும் மிக எளிது, ஆனால் அதை உள்ளபடி உணர்ந்து அதுவாகவே பரிணமிப்பது தான் ஒப்பற்ற உயர் நிலை!

முஹ்யித்தீன் எஜமான் அவர்கள் அந்த உயர் நிலையைத் தங்களின் 10வது வயதிலேயே பரிபூர்ணமாகப் பெற்று **தானே அதுவாக - அதுவே தானாக** தன்னிகரற்று திகழ்வதைப் பார்க்கிறோம்! இந்த 10 வயதிலிருந்து ஆண்டகை அவர்களின் 40 ஆண்டுகால நெடும்நோன்பு தொடங்குகிறது-

**கல்வி கால நோன்பு...**

பிறப்பிலேயே கல்விக் கடலான கௌஸுல் ஆஜம் முஹ்யித்தீன் பிரபு அவர்கள் உலக வழக்கப்படி உயர் கல்விக்காக தங்கள் 18வது வயதில் ஜீலான் நீஃப் தலத்தில் இருந்து பக்தாத் மாநகருக்குச் செல்கிறார்கள் உடன் கொண்டு சென்ற 40 தீனார்கள் பெருந் தொகையை தங்கள் கருணை உள்ளத்தின் விளைவாக எளியர் களுக்கும், முதியவர்களுக்கும், ஏழை மாணவர் களுக்கும் பகிர்ந்தளித்து விட்டதால் இரண்டாண்டு காலத்திலேயே மொத்த தொகையும் தீர்ந்துவிட அடுத்த பல நாட்கள் பட்டினி-

பல நாட்கள் தாங்கள் பசியால் வாடி சோர்வுற்ற போதெல்லாம் சஜ்தாவில் இருந்து

**இன்னமஅல் உஸ்ரி யுஸ்ரா ஃப இன்னமஅல் உஸ்ரி யுஸ்ரா**

துன்பத்தை அடுத்து இன்பம் உண்டு நிச்சயமாக துன்பத்தை அடுத்து இன்பம் உண்டு என்ற இறைமறை திருவாசகத்தை ஓதி புத்துணர்ச்சி பெற்றதாக முஹ்யித்தீன் எஜமான் தங்கள் வாய்மை வரலாற்றில் கூறுகிறார்கள்...

★ இப்படி 18வயதிலிருந்து 25 வயது வரை 7 ஆண்டுகாலம் நிஜாமியா பல்கலைகழக கல்வி காலத்தில் பல நாட்கள் நோன்பு!

★ 25 வயதில் கல்விக்காலம் நிறைவுற்ற பின் இறைக் கட்டளைப் படி மேலும் மூன்ற ஆண்டுகாலம் பக்தாத் மாநகரில் மஹான் ஷைகு ஹம்மாது ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கான்காஹ் (தவச்சாலையில்) பல அற்புத சாதனைகள் - அடுக்கடுக்கான சோதனைகள்! (இந்த மூன்று ஆண்டுகால வரலாற்று நிகழ்வுகள் - ஆன்மிகப் பேரரசர் முஹ்யித்தீன் ஆண்டகை வாய்மை வரலாறு என்ற நம் புனித பொக்கிஷமான நூலில் வாய்மை வரலாற்றில் வசந்த கால நிகழ்வுகள் என்ற தனி அத்தியாயமாக விரிவாக வருகின்றது)

**நுபுவத்து சூரியனும் விலாயத்து சந்திரனும்...**

★ அடுத்து 28வது வயதில் மக்காவுக்கு யாத்திரை...

ஆதி ஆலயமாம் புனித காபாவை வலம் வந்து கருபொருளாம் அல்லாஹ்வின் மெய் உணர்விலேயே திளைத்து அவனது உன்னத ஹபீபாகிய உத்தமத் திரு நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் உறைவிடம் நோக்கி மதீனா விரைந்து நுபுவத்து சூரியன் அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் புனிதமே உருவான ரவ்ளா ஷரீஃபில் விலாயத்துச் சந்திரன் முஹ்யித்தீன் அப்துல் காதர் ஜீலானி ஆண்டகை அவர்கள் இதயப் பூர்வ பேருணர்வுடன் இரு கைகளையும் ஏந்திய படி அப்படியே 41 நாட்கள் நின்றார்கள்

**உடல் குழைய என்பெல்லாம் நெக்குருக**

**விழி நீர்கள் ஊற்றென வெதும்பியூற்ற**

என்று குணங்குடி மஸ்தான் அப்பா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் பாடியுள்ளதைப் போல

உடல் மெழுகைப் போல் கனிந்து குழைய - எலும்புகளெல்லாம் தங்கள் இணைப்புகளைவிட்டு உருக - கண்களில் இளஞ்சூடான வென்னீரைப் போல் கண்ணீர் தொடர்ந்து ஊற்றாக பெருகி ஓடிக் கொண்டிருக்க - **முஹ்யித்தீன் எஜமான்** அவர்கள் உன்னத திரு நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது தாங்கள் கொண்ட எல்லையற்ற பாசமும் நேசமும் பெருகி பிரவகிக்க அப்படியே 41 நாட்கள் நின்று கொண்டிருந்தார்கள், உடல் அசையவில்லை - உள்ளம் ஒளிர்ந்து கொண்டிருந்தது -

இறுதியில் 41வது நாள் அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் **நூரே முஹம்மதியாவாக** - ஒளி மயமாக வெளிப்பட்டு **அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகை** அவர்களை ஆரத்தழுவி இறுக அணைத்து உச்சி முகர்ந்து முத்தமிட்டு அருமை மகனே! இஸ்லாத்தின் கருப் பொருளான மஅரிஃபாவின் (ஆன்மிகம் என்ற இறை உணர்வியலின்) ஞானத் திறவுகோலாக தாங்கள் விளங்கு வீர்கள் என்றென்றும் முஹம்மதும் முஹ்யித்தீனும் ஒன்றென்றே தாங்கள் திகழ்வீர்கள்! என்று அருளாசி பொழிந்தார்கள்

நுபுவத்து சூரியனும் விலாயத்து சந்திரனும் ஒன்றாக இணைந்து ஒன்றாகவே திகழ்வதை அன்று வானகத்து அமரர்களும், வையகத்து ஞான சீலர்களும், ரிஜாலுல் கைப் என்ற மறைவான உலகத்துப் புனித ஆன்மாக்களும் கண்கொள்ளா திருக்காட்சி என கண்டு **நூரே முஹம்மதியாவின்** அரவணைப் பையும் அருளாசியையும் ஒரு சேரப்பெற்றுப் பேரானந்தத்துடன் **முஹ்த்தீன் எஜமான்** நேரே ஈராக்கின் இருண்ட கர்க் கானகத்தை நோக்கி பயணமானார்கள்-

**கர்க் கானகத்தில் நோன்புப் பயணம்...**

கொடிய விஷ ஜந்துக்களும் விலங்குகளும், விஷ முட்களும் நிறைந்த இருண்ட கர்க் கானகத்தின் உள்ளே 28வது வயதில் முஹ்யித்தீன் பிரபு நுழைந்தார்கள்-

கானகத்தின் உள்ளே 9 ஆண்டு காலம் ஊன் உறக்கமில்லாமல் கடினமான தவயோக சாதனைகள் - 9 ஆண்டுகளுக்குப் பின் தங்கள் நஃப்ஸை - தங்கள் ஆன்மாவின் நிலையை தாங்களே பார்க்கும் ஆற்றலைப் பெற்றார்கள் - திடுக்கிட்டார்கள் -

இங்கே எஜமான் அவர்களே அதைச் சொல்கிறார்கள்;

9 ஆண்டுகளுக்குப் பின் என் நஃப்ஸை நானே பார்க்கும் ஆற்றலைப் பெற்றேன் - பார்த்ததும் திடுக்கிட் டேன், 9 ஆண்டுகளுக்குப் பிறகும் என் நஃப்ஸிலே சில குறைபாடுகள் இருப்பதை பார்த்து திடுக்கிட்டேன் - மீண்டும் இரண்டு ஆண்டுகாலம் அதிதீவிரமாக நஃப்ஸுடன் போராடினேன்- 11வது ஆண்டின் முடிவில் என்னைப் பொறுத்தவரை இப்லீஸ் இல்லாமல் போனான்!

ஒரு நாள் கானகத்தின் மத்தியில் ஒரு மரத்தின் அடியில் **முஹ்யித்தீன் பிரபு** அவர்கள் ஏகாந்த சிந்தனையுடன் நின்று கொண்டிருந்தார்கள் -

திடீரென்று கம்பீரமான ஒரு அற்புத மனிதர் **எஜமான்** முன்னிலையில் தோன்றினார் - அப்துல் காதிரே! அல்லாஹ்வின் நெருக்கம் மென்மேலும் வேண்டும் என்றால், நான் சொல்கிறபடி செய்யுங்கள் மீண்டும் நான் வரும்வரை இங்கேயே இருங்கள்! என்று சொல்லிவிட்டு போய்விட்டார் -

முஹ்யித்தீன் எஜமான் அங்கேயே அப்படியே இருந்தார்கள் - ஒருநாள் அல்ல இரு நாட்கள் அல்ல - ஓராண்டு வரை அங்கேயே இருந்தார்கள் -

அந்த புனித மனிதர் மிகச் சரியாக ஓராண்டுக்குப் பின்தான் அங்கே வந்தார்.

அப்துல் காதிரே! மிகச் சரியான பரிபூர்ண உறுதியோடு இருக்கிறீர்கள் மிக்க மகிழ்ச்சி! நான் மீண்டும் வரும் வரை இங்கேயே இப்படியே இருங்கள் என்று கூறிவிட்டு மீண்டும் சென்றுவிட்டார் - மீண்டும் அடுத்த ஆண்டு வந்து மீண்டும் பாராட்டி விட்டு ஒரு கம்பளியைக் கொடுத்து விட்டு மீண்டும் நான் வரும் வரை இங்கேயே இருங்கள் என்று கூறிவிட்டு சென்றுவிட்டார்

அடுத்து மிகச் சரியாக மூன்றாவது முறையாக ஓராண்டுக்குப் பின் வந்த அந்த அதிசய மனிதர்;

அப்துல் காதிரே! தங்களின் ஒப்பற்ற உறுதிக்கு ஈடுஇணையே கிடையாது! அல்லாஹ்வின் அற்புத மஹ்பூபாக தாங்கள் திகழ்கிறீர்கள்!

நான் தான் "கிலுறு" தங்களுக்கு அல்லாஹ் தன்னுடைய உள்ளமையின் உட்கருவான **இஸ்முல் ஆலத்தை** தங்களுக்கு அளிக்கச் சொன்னான் இதோ பெற்றுக் கொள்ளுங்கள் என்று மொழிந்து **இஸ்முல் ஆலம்** என்னும் மஹா பொக்கிஷத்தை வழங்கிவிட்டு கிலுறு அலைஹிஸ் ஸலாம் அவர்கள் சென்று விட்டார்கள்

இந்த மூன்று ஆண்டுகாலத்தில் **முஹ்யித்தீன் பிரபு** அவர்கள் (அந்த 39வது வயதில்) முதல் ஆண்டு வெறும் இலை தளைகளை மட்டுமே உண்டார்கள், நீர் அருந்தவில்லை, அடுத்த ஆண்டு வெறும் நீர் மட்டுமே அருந்தினார்கள், திடப்பொருள் ஏதும் உண்ணவில்லை, மூன்றாவது ஆண்டு எதையும் உண்ணவும் இல்லை, பருகவும் இல்லை, உறங்கவும் இல்லை!

அல்லாஹ் உண்பதில்லை, பருகுவதில்லை, உறங்குவதுமில்லை, அவனை அடைய ஆசைப்படும் ஒரு அடியான் அவன் குணங்களைப்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம் காண்க...



# علم القرآن یعنی تفسیر القرآن

# திருமறையின் தெளிவுரை

உருது மூலம் : ஹகீமுல் உம்மத் அஹ்மத் யார்கான் ரஹ்மதுல்லாஹி அலைஹி --- தமிழில் : மௌலவி ஹாபிஸ் அப்துர் ரஜ்ஜாக் காதிரி சூ:பி

**ஈமான் கொண்டவர்களும், பெயர் தாங்கிகளும்...**

நாம் கடந்த இதழில் அரபி மொழியின் புழக்கம் பற்றிய பாடத்தில் ஈமான் எனும் வார்த்தையின் விளக்கத்தைப் பற்றி குர்ஆனின் வசனங் களைக் கொண்டே தெளிவுபடுத்தி னோம். இன்னும் பல விளக்கங்களை இந்த இதழில் தொடர்ந்து படித்து திருமறையைப் பற்றிதங்கள் புரிதலை விசாலப்படுத்திக் கொள்ளுங்கள்.

தெளிவான சிந்தனைகள் மட்டுமே நமது மனதை அமைதி படுத்தும். எந்த ரூபத்தில் இந்த இஸ்லாமிய பெயர் தாங்கிகளான வஹ்ஹாபிய வழிகேடர்கள் தறிகெட்ட தப்லீக்வாதிகள் தமது நச்சுக் கருத்துக்களை வெளியிட்டாலும், தேன் தடவிய வார்த்தைகளால், செயல்களால் நம்மை ஏமாற்றி நமது ஈமானை பறிக்க முயன்றாலும் நமது ஈமான் உறுதியா னதாக நம்மிடையே இருக்கும். எனவே ஈமானை குறித்த விளக்கங்களை ஒரு காலமும் மறவாது மற்றவர்களுக்கும் அது குறித்த சிந்தனைகளை ஏற்படுத்துவதும் நமது ஈமானை மேலும் வலுபடுத்தும். அல்லாஹ் அதற்கு போதுமானவன். வாருங்கள் யார் உண்மையில் ஈமான் கொண்டவர்கள்? யார் பெயர் தாங்கிகள் என்பதனை குர்ஆனின் ஒளியில் பார்ப்போம்.

**முனாஃபிக்குகள்...**

நாயகமே! தங்களின் சமூகத்திறகு இந்த முனாபிக்குகள் வந்தால் நிச்சயமாக தாங்கள் அல்லாஹ்வின் தூதர். இன்னும் தாங்களே அவனது தூதர் என அல்லாஹ்வும் அறிவிக்கிறான் என்று நாங்கள் சாட்சி கூறுகிறோம் என்று கூறு கின்றார்கள். ஆனால் அல்லாஹ் சாட்சி கூறுகின்றான்... இந்த முனாபிக்குகள் பொய்யர்கள். **( சூரத்துல் முனாபிகூன் முதல் வசனம்)**

பார்த்தீர்களா? மேற்படி வசனத்தில் நமக்கு விளங்குவது என்ன? நபிகளாரை வெறும் வாயால் மட்டும் ஒப்புக் கொள் பவன் முஃமின் அல்ல. அவன் முனாபிக். இதயப்பூர்வமாக அவர்களின் மீது நம் பிக்கை கொள்வது தான் ஈமான் ஆகும்.

இந்த முனாபிக் எனப்படும் நயவஞ்சகர்கள் வாயால் கூறிய சொல் உண்மைதான். ஆனால் அவர்கள் பொய் யாக, நம்மை ஏமாற்றுவதற்காகவே இதை கூறினார்கள். இன்று உள்ள பெயர் தாங்கி களும் இப்படி தான் கூறுகிறார்கள். இதயத்தில் இதன் பேரில் நம்பிக்கை கொள்பவர்களே முஃமின்கள்.

முனாபிக்கள் எனப்படும் பெயர் தாங்கி முஸ்லிம்களான வஹ்ஹாபிய வழிகேடர்கள் வழிகெட்ட தப்லீக்வாதிகள் தேவ்பந்திகள் ஜமாஅத்தே இஸ்லாமிகள் மற்றும் உள்ள அத்துணை வழிகேடர்க ளும் நபிகளாரின் மீதும் பொய்யாக ஈமான் கொண்டதன் அடையாளம், நபிகளாரின் மீது இழிவான குறைகளையும் குற்றங்க ளையும் கூறுவதுதான். உண்மை முஃமின் கள் ஒரு போதும் இவ்வாறு கூறுவதற்கு துணியமாட்டார்கள். நபிகளார் மீது அளவிலா அன்பும் பரிபூர்ண நம்பிக்கை யும் கொண்டவர்கள். அவர்களிடம் நபி யின் கட்டளை வந்துவிட்டால் சுய விருப் பத்திற்கு இடம் கொடுக்க மாட்டார்கள். கீழ் காணும் இறை வசனத்தை பாருங்கள்.

அல்லாஹ்வும் அவனது ரஸூலும் ஒன்றை தீர்ப்பு செய்துவிட்டால் அந்த விஷயத்தில் சுய விருப்பத்தை காண்பது எந்த ஒரு முஃமினான ஆணுக்கோ, பெண்ணுக்கோ உரிமையில்லை.

இந்த வசனம் ஹஜ்ரத் ஜைனப் அவர்கள் ஹஜ்ரத் ஜைத் அவர்களை திருமணம் புரியும்படி கட்ட ளையாக வந்த வசனமாகும். இந்த வசனம் இறங்கியவுடன் தன் சுய விருப்பத்திற்கு இடம் கொடுக்காமல் நபிகளாரின் கட்டளைப்படி மணமுடித்ததுக் கொண்டார்கள்.

நபிகளாரின் சமூகத்தில் தன்னை முழுமையாக ஒப்படைத்தவர்களால் மட்டுமே அவர்களின் எல்லா கட்டளை களுக்கு முழுமையாக தன்னை அற்ப ணிக்க முடியும். நபிகளாரின் மீது பூர்ண அன்பு கொண்டு தன்னை அடிமையாக பாவிப்பவர்களே முஃமின்கள்.

**நாம் நபிகளாரின் அடிமைகள்...**

எல்லா முஃமினான ஆண் பெண் அனைவரும் நபிகளாருக்கு அடிமைகள் தான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை மேற்படி வசனமும் இதையே குறிப்பிடுகின்னது.

உண்மையாகவே தன்னை நபிகளா ரின் அடிமைகளாக ஆக்கிக்கொண்டவர் கள் தம் உயிருக்கும் மேலாக நபிகளாரை நேசிப்பவர்களாகவே இருப்பார்கள். இவர் களுக்கு மட்டுமே இது சாத்தியமாகும். இதையே திருக்குர்ஆனின் வசனம் கூறுவதை பாருங்கள்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் முஃமின்க ளுக்கு அவர்களின் உயிருக்கும் மேல் அதிகாரமுடையவர்கள். நபிகளாரின் மனைவிமார்கள் முஃமின்களனின் அன்னையாவார்கள்.

எப்போது நபிகளார் முஃமின்களின் உயிருக்கும் மேல் அதிகாரமிக்கவர்களாக ஆகி விட்டார்களே! நமது பொருள், பிள்ளைகள், அனைத்திற்கும் அவர்களே உரிமையாளர் என்பதை நாம் சொல்லவும் வேண்டுமா?

இதற்கு மாற்றமாக நபிகளாருக்கு சாதாரண இல்முதான் வழங்கப் பட்டுள்ளது. அவர்களும் நம்மை போன்ற சாதாரண மனிதர் தான் எனக் கூறுபவர் கள் நபிகளாரின் மீது கொண்ட நம்பிக்கை யை-அன்பை நேசத்தை தாங்களே நாசம் செய்து கொண்டவர்கள். இத்தகைய பொய்யர்களே இன்று இஸ்லாத்தை நேர்வழிப் படுத்துகின்றார்களாம். இஸ்லாத்தை தூய்மைபடுத்துகிறார் களாம். முஃமின்களே! இவர்களை நாம் பின்பற்றினால் என்ன ஆகும் என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்! குர்ஆன் ஷரீஃபில் இந்த பொய்யர்களைப் பற்றி மிகத் தெளிவாக கூறிய பின்னரும் இத்தகைய வழிகெட்ட வஹ்ஹாபியர் களை - பெயர் தாங்கிகளை பின்பற்றுபவர் களை நாம் என்னவென்று கூறுவது? அவர்களின் வழியை ஒருகணம் அவர்களே மறுபரிசீலனை செய்யட்டும். இதற்காகவே நாம் இதனை மேலும் தெளிவுபடுத்துகிறோம். நபிகளாரை அணுஅளவேனும் அவமரியாதை செய்வது அவர்களின் மீது குறை கூறுவது அவர்களின் மனதை வருந்தச் செய்வது ஈமானுக்கு எதிரான குஃப்ராகும். அதாவது இறை மறுப்பாகும். நமது நல்அமல்கள் எல்லாம் அழிந்து விடும் என்பதையும் குர்ஆன் தெளிவாகவே கூறுகின்றது. இதனை நாம் வரும் இதழில் காண்போம்.

**படிப்பிணை...**

நபிகளாருக்கு இணையாக தம்மை கருதுபவர்களே நபிகளாரை குறை கூறி ஈமானை பாழ்படுத்தி ஷைத்தான்களுடன் கைகோர்த்து முஃமின்களின் ஈமானை பாழ்படுத்த பல்வேறு அமைப்புகளின் மூலம், இயக்கங்களின் மூலம் முனைப் புடன் செயல்படுகிறவர்கள்.

முஃமின்களே! தெளிவான விளக்கத்தை மனதில் என்றும் நிலை நிறுத்தி ஈமானை உறுதியாக பற்றிப்பிடிப் பதுடன் தவறானவர்களை விட்டும் விலகி இருக்க வேண்டும் என வேண்டுகிறோம். சிந்திப்பவர்களுக்கு தெளிவு கொடுத்துள் ளோம். விதண்டா வாதம் புரிபவர் களுக்கு நாம் என்ன செய்ய இயலும்? அல்லாஹ் நம் அனைவரையும் நேர்வழிப் படுத்துவானாக. ஆமீன்!

**இன்ஷா அல்லாஹ் தெளிவடைவோம்.....**

**தர்கா** இதழ் வாசகர்களுக்கு...,

## ஈத் பெருநாளின் முபாரக்கான இனிய நல்வாழ்த்துக்கள் !!

மரியாதை மிகுந்த **தர்கா** இதழின் இனிய வாசகர்களே ! அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பர்காதுஹூ... ஈது பெருநாளின் முபாரக்கான இனிய நல்வாழ்த்துக்களை கூறிக்கொள்வதுடன் வாழ்த்துக்கள் பயனுள்ளதாக அமைய ஈத் அன்று என்ன செய்ய வேண்டும் என்பதை தங்களுக்கு தெரிவித்துக் கொள்வதில் **தர்கா** இதழ் பெருமை கொள்கிறது

## ஈது பெருநாள் அன்று என்ன செய்ய வேண்டும்?

ஈது பெருநாள் அன்று காலை ஃபஜர் தொழுகை முடித்து விட்டு ஷீர் குர்மா என்னும் பால் பாயசத்தை செய்து வைத்து ரஸூலுல்லாவின் பேரில் ஃபாத்திஹா செய்து, யா அல்லாஹ்! இந்த 'ரமலானில் எங்களுக்கு நோன்பு வைக்கும் பாக்கியத்தை வழங்கி னாயே, அதற்கு நன்றி செலுத்து கிறோம். எங்களால் அதில் ஏற்பட்ட குற்றங்குறைகளையும், பாவங்க ளையும் மன்னித்து இந்நன் நாளிலே எல்லாவித பரக்கத்துகளையும் வழங்குவாயாக, என்று துஆ செய்து பாயசத்தை குடிக்க வேண்டும்.

பாரசீக மொழியில் ஷீர் என்றால் பால், குர்மா என்றால் பேரீச்சம் பழம். இவை இரண்டும் 30 நாள் நோன்பு நோற்றவர்களுக்கு உடல் ரீதியாக ஆரோக்கியத்தை தருகிறது. (இதன் செய்முறை விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.)

**ஃபாத்திஹா மற்றும் புத்தாடை :**

ஃபாத்திஹாவின் போது குளித்து புத்தாடை அணிந்து குடும்பத்துடன் அமர்ந்து ஃபாத்திஹா ஓதுவது சிறப்பானதாகும்.

புத்தாடை அணிவதற்கு முன்பு தரூதே ஷரீஃப் என்ற ஸலவாத்தும், அலம்நஷ்ரஹ் சூராவும் ஓதி, சிறிது தண்ணீரில் ஊதியபின் அத்தண் ணீரை புத்தாடைகளில் தெளித்து அதன் பிறகு அணிவது முஸ்தஹப் ஆன காரியமாகும்.

**ஃபித்ரா கொடுத்தல் :**

புத்தாடை அணிந்தபின் முதல் காரியமாக ஸதகத்துல் ஃபித்ரா என்னும் தானத்தை தந்துவிட வேண்டும். இது ஒவ்வெரு வசதிபடைத்த ஆண், பெண் ஆகிய சாஹிபே நிஸாப் என்னும் ஜகாத்தின் கட்டுப்பாட்டிற்குள் வருபவர் மீதும் வாஜிபாகும். பெற்றோர் தமது குழந்தைகளுக்கும் சேர்த்து தாங்களே ஃபித்ரா கொடுக்க வேண்டும்.

பெருநாள் தொழுகை ஈத்கா என்னும் மைதானத்தில் தொழுவது சுன்னத்தாகும். பெருநாள் தொழுகைக்கு செல்லு முன்பே தமது ஃபித்ராவை கொடுத்து விடுதல் ஏற்றமாகும். ஈத்காவிற்கு ஒரு வழியாக சென்று மறுவழியில் வருவது சுன்னத்தாகும். ஈத்கா மைதான வசதியில்லாத ஊர்களில் பள்ளிகளில் தொழுவது கூடும். பெருநாள் தொழுகைக்கு செல்லும்போது தக்பீராத்துக்கள் ஓதிக் கொண்டு செல்வது சிறப்பானதாகும். ஈத்பெருநாள் தொழுகை நேரம் வரை எல்லோரும் தக்பீர் ஓத வேண்டும்.

**தொழுகை முடித்தபின் என்ன செய்ய வேண்டும்?**

தொழுகை முடிந்து எல்லோருக்கும் முஸாஃபா (கைலாகு) கொடுத்து, முஆனகாவுக்குப் பின் (கட்டித் தழுவுதல்) வீடு திரும்புகையில் தர்காவிற்கு சென்று ஜியாரத் செய்து ஃபாத்திஹா ஓதலும், கபர்ஸ்தானுக்கு சென்று தம் குடும்பத்தில் மவுத்தானவர்களுக்கு துஆசெய்வதும் சுன்னத்தாகும்.

வீட்டிற்கு திரும்பியவுடன், பெற்றோர், தாதா, தாதி, நாநா, நானி மற்றும் குடும்ப பெரியவர்களின், கால்தொட்டு முத்தமிடுவதும், கைகளை கண்களில் ஒத்தி முத்தமிடுவதும், மரியாதை செலுத்தி அவர்களிடம் துஆ பெறுவதும் சிறப்பான செயல்கள் ஆகும். தங்களிடம் துஆ பெறவரும் குழந்தைகளையும், சிறியோர்களையும் பாசத்தோடு வரவேற்று அன்பு செலுத்தி வசதிக்கேற்ப ஈதி என்ற சன்மானமும், பரிசுகளும் வழங்குவது வழக்கமாகும்.

**மத நல்லிணக்கம்:**

ஈத் பெருநாள் அன்று சிறப்பான உணவுகள், இனிப்புகள் குறிப்பாக பிரியாணி, குஷ்கா, நெய்சோறு, குர்மா, கரியானம், ஷீரினி, பலகாரங்கள் சமைத்து தாமும் உண்டு, மற்ற சக சமூகத்தார்க்கும் கொடுத்து தமது மகிழ்ச்சியையும் அன்பையும் தெரிவிக்க வேண்டும். இப்படி செய்வது, நமது மார்க்கத்தின் மேன்மையையும், விருந்தோம்பலையும், பரந்த மனப்பான் மையும் மத நல்லிணக்கத்தையும், எடுத்துக் காட்டும்.

இதற்குப்பின் நேரம் கிடைக்கும் போது உற்றார், உறவினர்களின் வீட்டிற்கு சென்று ஈது பெருநாள் வாழ்த்துக்கள், பகிர்ந்து கொண்டு பெரு நாளை மகிழ்ச்சியாக கொண்டாடுவோம்.

என்ன? பெருநாள் கொண்டாடுவோமா?

**பாய் சாப் ! ஈத்முபாரக் !**

**ஆபா ஜான்! ஈத் முபாரக்!**

## ஷீர் குர்மா தயாரிக்கும் முறை :

**ஷீர் குர்மாவுக்கு வேண்டிய பொருட்கள் :**

சீனி :1/2 கிலோ,
காய்ந்த பேரீச்சம் பழங்கள் :5,
நெய் :100 கிராம்,
பால் :1 லிட்டர்,
பன்னீர் :1 டீஸ்பூன்,
பாதாம்பருப்பு : 100 கிராம்,
மெல்லிய ருமானிசேமியா:100 கிராம், லவங்கம், பட்டை, ஏலக்காய் - தேவைக்கேற்ப சிறிது,

**செய்முறை :**

1. ஷீர் குர்மா செய்ய ஆரம்பிக்கும் 5 மணி நேரம் முன்பு பாதாம் பருப்பையும், பேரீச்சம்பழத்தை யும் தண்ணீரில் ஊற வைத்து உறித்துக் கொள்ளவும்.
2. ஒரு சிறிய பாத்திரத்தில் சீனியை போட்டு அதில் 1/4 லிட்டர் தண்ணீர் சேர்த்து நன்றாக கொதிக்க விட்டு பாகுவரும் முன்பே இறக்கி வைத்து விடவும்.
3. பிறகு அதைவிட பெரியபாத்தி ரத்தை அடுப்பில் வைத்துநெய் ஊற்றி சூடானதும் லவங்கம், பட்டை, ஏலக்காய் போட்டு உடன்சேமியாவும் போட்டு பாதாம் நிறம் வரும் அளவிற்கு நன்றாக வறுக்கவும்.
4. நன்றாக வறுத்த பிறகு அதில் நறுக்கிய பேரிச்சம்பழமும், சுட வைத்த பாலையும் ஊற்றிகிளற வும், நல்ல கொதி வந்த பிறகு இறக்கி வைத்து விட்டு அதில் சீனி பாகை முழுவதும் ஊற்ற வேண்டும்.
5. பாதாம் பருப்பை மெல்லியதாக நறுக்கிப் போட்டு பன்னீர் சேர்த்து விட்டால் சுவையான ஷீர்குர்மா ரெடி.

**– பீரானி பீ .**

**( ஷீர் குர்மா தயாரித்து ஈதுப் பெருநாள் கொண்டாடிய உங்கள் அனுபவங்களை எங்களுக்கு கார்டில் தெரியப்படுத்துங்களேன் )**

**இவண்**

*தர்கா இதழ் குழுமம்.*

## புதையல்...10 தப்லீக் வஹ்ஹாபிகள் தமிழகத்தில் நுழைந்த கதை...

இன்று தவ்ஹீது வாதிகள் என்று சொல்லிக் கொள்ளும் வஹ்ஹாபிகள் பகிரங்கமாக அல்லாஹ்வின் மீதும் அவன் ரஸூலின் மீதும் அவுலியாக்களின் மீதும் வைக்கும் தரக்குறைவான விமர்சனங்களையும், தங்களின் தப்புத் தப்பான மார்க்க சட்டங்களையும் உள்ளே மறைத்துக் கொண்டு மெல்ல மெல்ல வஹ்ஹாபிய கொள்கைகளுடன் தேவ்பந்து மதரஸாவின் ஆதரவோடு அதே வஹ்ஹாபிய நச்சுக் கருத்துக்களை தமிழகத்தின் உள்ளே நுழைக்க நெற்றியில் கருப்பும், கையில் தஸ்பியும், மழித்த மீசையும், நீண்ட தாடியும், அதைவிட நீண்ட ஜிப்பாவும் போட்ட தப்லீகர்கள் முயன்ற போது அவர்களை நம் தமிழகத்து சுன்னத் ஜமா அத்தின் அன்றைய சங்கை மிகு உலமாக்கள் எப்படி தடுத்தனர் என்பதை அறிந்து கொள்ளும் நோக்கத்தோடு துவக்கப்பட்டதுதான் இந்த புதையல் பகுதி .

அல் மதத் யா ரஸூலல்லாஹ்

## வஹ்ஹாபிகள் என்று அழைக்கப்படுபவர் யார்?

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைக் கொண்டு ரிவாயத் செய்யப்படுகின்றது.

நபிகள் நாயகம் அவர்கள் பிரார்த்தித்தார்கள் : -

இறைவனே! எங்களது ஷாம் தேசத்துக்கும் பரக்கத் செய்வாயாக. இறைவனே எங்களது யமன் தேசத்துக்கும் பரக்கத் செய்வாயாக, இது சமயம் அங்கிருந்த நஜ்து தேசத்தவர் சிலர் நஜ்து தேசத்துக்காகவும் துஆ செய்யும்படி கேட்டுக் கொண்டனர். மறுமுறையும் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஷாம் - யமன் தேசங்களுக்கு மட்டும் துஆ செய்தார்கள். மீண்டும் நஜ்து தேசத்தவர் தங்களது தேசத்துக்காக துஆ செய்யும்படி கோரவே நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் நஜ்தில் அதிர்சிகளும் பித்னாக்களும் உண்டாகும். அங்கு ஷைத்தானுடைய கூட்டம் வெளியாகும் என்று கூறினார். **(நூல் :ஸஹீஹ் புகாரி.)**

### இப்னு தைமியா :

நபிகள் பெருமான் அவர்களது திருவாக்கின்படி நஜ்து தேசத்தில் முதன் முதலில் இப்னு தைமியா உண்டானார். இவர் கல்வி கேள்விகளில் தேர்ச்சிபெற்றிருந்தும் அகக்கண் குருடானவர். இறைவனால் இருதயத்திலும், செவியிலும் முத்திரை இடப்பட்டவர். இவர் எழுதிய புத்தகங்களில் சிராத்துல் - முஸ்தகீம் என்பதும் ஒன்று. இதில் முஜ்தஹிது, ஔலியா ஆகியோரை இழிசொற்களால் நிந்தித்து சொல்லத் தகாத சொற்களால் தூஷணம் செய்துமிருக்கிறார். மேலும் இமாம்களின் ஏகோபித்த அபிப்பிராயங்களுக்கு (மஸாயில்களுக்கு) முற்றிலும் முரணான விதிமுறைகளை உண்டு பண்ணியிருக்கிறார். அக்காலத்தில் பிரபல்ய உலமாக்கள் இப்னு தைமியாவின் கருத்துக்கள்-கொள்கைகளுக்கு மறுப்பு எழுதி இருக்கிறார்கள். இவருடைய பிரச்சாரத்தால் மக்களிடையே குழப்பம் ஏற்பட்டு இறுதியாக சிரியா அரசாங்கம் டமாஸ்கஸ் நகர சிறையில் இவரை சாகும் வரை காவலில் வைத்தது. இவர் ஹிஜ்ரி 728 - வருடம் இறந்தார்.

### இப்னு தைமியாவைப் பின்பற்றிய அப்துல் வஹ்ஹாபு நஜதி :

ஹிஜ்ரி 1203-ம் வருடம் துருக்கி சுல்தான் 2வது அப்துல் மஜீதுகானின் மறைவுக்குப் பின்பு நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்டது. இந்த சந்தர்ப்பத்தை இப்னு தைமியாவின் கொள்கைகளை தீவிரமாக பின்பற்றி பிரச்சாரம் செய்து வந்த அப்துல் வஹ்ஹாபு நஜதி என்பவர் பயன்படுத்திக்கொண்டு சூழ்ச்சி செய்து தாமே தலைவராக பிரகடனப்படுத்திக் கொண்டார். இவர் தமது சுற்றத்தினரை அரசாங்க அதிகாரிகளாக்கினார். துருக்கி சுல்தானுடைய பெயருக்கு பதிலாக அப்துல் வஹ்ஹாப் நஜதியுடைய பெயர் குத்பாவில் சேர்க்கப்பட்டது. இவர் இப்னு தைமியாவை பின்பற்றி புதிதாக ஒரு மத்ஹபு உண்டாக்க முற்பட்டு சுன்னத் வல் ஜமாஅத்திற்கு முற்றிலும் முரண்பட்ட கொள்கைகளை உருவாக்கினார். இவருடைய இளைய மகன் முஹம்மது என்பவர் அதற்கு மெருகேற்றி விரிவுரை செய்து அதற்கு கிதாபுத் தௌஹீது என்று பெயரிட்டார்.

### முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் நஜதி :

அப்துல் வஹ்ஹாபுடைய மகன் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் தகப்பனுக்குப் பின் தலைவனாகி குத்பா ஓதும் போதெல்லாம் நபியைக் கொண்டு சிபாரிசு தேடுகிறவன் காபிராவான் என்று ஓதுவதை வழக்கமாக்கிக் கொண்டான். இவனுடைய படைத் தலைவன் சுஊது என்பவன் ஹிஜ்ரி 1221 ல் ஹஜ்ஜுக்குப் போவதாக பாசாங்கு செய்து பெரும் படையுடன் மக்காவுக்குள் நுழைந்து பொருள்களை சூறையாடி ஆண், பெண், குழந்தை, வயோதிகர் பாகுபாடின்றி எல்லாரையும் வெட்டி வீழ்த்தினான். புனித மதீனாவில் ஹழ்ரத் செய்யிதினா அப்பாஸ், செய்யிதினா இப்னு அப்பாஸ், செய்யிதினா உதுமான், செய்யிதினா பாத்திமா ஜொஹ்ரா ஆகியோர்களின் மக்பராக்கள் இடித்து வீழ்த்தப்பட்டன. ஸலவாத் ஓதியவர்கள் கொல்லப்பட்டனர். ஹதீஸ் பிக்ஹு நூற்கள் முதலியவை எரிக்கப்பட்டன. ரவுளத்துன் நபியையும் தரைமட்டமாக்க முற்பட்ட போது அந்த ஷைத்தான்கள் அற்புதமாக செத்து மடிந்தனர்.

மேலே சொன்ன முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாபால் எழுதப்பட்ட கிதாபுத் தௌஹீது இந்தியாவுக்கும் வந்து, டெல்லியிலுள்ள மௌலவி இஸ்மாயீல் என்பவர் அதனை முற்றிலும் ஓதிக் கொண்டு வஹ்ஹாபி மத்ஹபைப் பரப்பலானார். அந்த நூலை உருதுவில் மொழிபெயர்த்து விரிவுரை செய்து தக்வியத்துல் - ஈமான் எனும் பெயரில் ஒரு புத்தகம் வெளியிட்டார். வஹ்ஹாபிகள் புரட்சிக்காரர்கள் என்று உலகம் முழுவதும் தெரிந்திருந்த படியால் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்துக்கு பயந்து கி.பி.1891ம் வருடம் அந்த இயக்கத்துக்கு அஹ்லே - ஹதீஸ் என்று பெயர் மாற்றி பதிவு செய்து கொண்டனர். இவர்களது கொள்கைகள் சித்தாந்தங்கள் சுன்னத் வல் ஜமாஅத் கொள்கைகளுக்கு முற்றும் முரண்பட்டவை. குறிப்பாக அன்பியா, ஔலியா, ஸஹாபா ஆகியோர்களை நிந்தித்தலும் (இன்கார்) பழித்தலும் இவர்களது பிரதான கொள்கைகள். இவர்களது பல நூல்களிலிருந்து சிலவற்றை எடுத்து உதாரணத்திற்காக கீழே தருகிறோம்.

1. நபிகள் நாயகம் ஹயாத்துன் நபி அல்ல. மரணமாகி மண்ணோடு மண்ணாகிப் போனார்கள். **(தக்வியத்துல் ஈமான்)**

2. நபிகள் நாயகம் அவர்களுடைய ரவுளாவுக்கு ஜியாரத் செய்யப் போகுதல் கூடாது. **(குனூஸெ ஷரீஅத்)**

3. நபிகள் நாயகம் அவர்களுடைய ஜியாரத்தை நாடிப் பிரயாணப்படுதல் சிலை வணக்கத்தை செய்யும் பாவத்தை போலாகும். **(கிதாபுத் தௌஹீத்)**

4. நபிகள் நாயகம் அவர்களுடைய ஞாபகம் தொழுகையில் வருமானால் மாடு, கழுதையின் ஞாபகம் வருவதை விடக்கெட்டது. **(சிராத்தே முஸ்தகீம்)**

5. முஹம்மது நபி அவர்களுக்குச் செய்யும் மரியாதை நாம் நமது மூத்த சகோதரருக்குச் செய்யும் மரியாதைக்குச் சமமாகவே இருக்க வேண்டும் அவர்கள் மறைவான விஷயத்தை அறிவார்கள் என்று ஒப்புக்கொள்வது ஷிர்க் ஆகும். அவர்களை யா முஹம்மது! யாரஸுலல்லாஹ்!! என்று அழைப்பவர்கள் அனைவரும் காபிர் ஆவர். அவர்களுடைய ரவுலாவுக்கு முன் மரியாதைக்கு நிற்பது கூட ஷிர்க் ஆகும். **(தக்வியத்துல் ஈமான்)**

6. அன்பியா அவ்லியாக்களுக்கு எத்தகைய சக்தியும் கிடையாது. அவர்களுக்கு கேட்கவுஞ் செய்யாது. அவர்கள் நமக்கு சிபாரிசு செய்வார்கள் என்றெண்ணுவது ஷிர்க் ஆகும். **(தக்வியத்துல் ஈமான்)**

7. இமாம் அபூ ஹனீபா - வைப் பார்க்கினும் ஒரு நாவிதன் மேலானவன் அவருடைய பிக்ஹுகள் ஞானமில்லாதவை அவர் ஷைத்தானுடைய கொம்பாவார். **(கிதாபுல் ஜாஷ் அலா அபீ ஹனீபா)**

*8.* நபிகள் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு அன்ஹு ஆகியோர்களு டைய பாத்திஹாக்களுடைய ஷீரனி சோறு வகையறா ஹராம் ஆகும்.

**(பத்வாயே நஷீது அஹமது)**

இவை மட்டுமல்ல இன்னும் நூற்றுக்கணக்கான வஹ்ஹாபி நூற்களில் காணப்படுகின்றன.

**வஹ்ஹாபிகளுக்கும் தப்லீக் இயக்கத் தினருக்கும் உள்ள தொடர்பு:**

தப்லீக் இயக்கத்தின் ஸ்தாபகர் முகம்மது இல்யாஸ் இவர் *1303* ல் வட இந்தியாவில் காந்திலா எனும் ஊரில் பிறந்தார். இவருடைய ஞான ஆசிரியர்கள் ரஷீது அஹமத் கங்கோஹி, மஹ்மூது ஹசன் தேவ்பந்தி, கலீல் அஹ்மத் அம்பேட்டி, அஷ்ரப் அலீ தானவி ஆகியோர்கள் ஆவர். இவர்கள் எல்லோரும் மேலே சொன்ன வஹ்ஹாபிய கொள்கைகளை பிரச்சாரம் செய்த தீவரவாதிகளாக இருந்தனர். தங்களு டைய கொள்கை விளக்கத்துக்குப் பல வஹ்ஹாபிய நூற்கள் எழுதியுள்ளனர். முஹம்மது இல்யாஸ் இவர்களை குத்புகள் என்று கூறி அவர்களை குருமார்களாக ஏற்றுக்கொண்டார். அவர்களு டைய கொள்கைகளையும் ஏற்றுக் கொண்டார். ஆகவே முஹம்மது இல்யாஸும் வஹ்ஹாபிதான். வஹ்ஹாபிய கொள்கைகளை மக்களிடையே நேரடியாக கூறினால் எதிர்ப்பு ஏற்படும் என்று எண்ணி திட்டமிட்டு மக்களை தொழுகைக்கு அழைப்பது போல் அழைத்து அவர்களுக்கு இஸ்லாத்தின் பேணுதல்களை கூறுவது போல் நல்லதை ஏவுவதைப் போல் அவர்களை கவர்ந்து கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் மனதில் வஹ்ஹாபிய கொள்கைகளை புகுத்திவிட முனைந்தார். இது சர்க்கரையால் மூடிய விஷத்தைப் போன்று உள்ளது. முகம்மது இல்யாஸின் நோக்கம் மக்களை தொழுகைக்கு அழைப்பதல்ல என்பதற்கு அவரே கூறியதான உதாரணம் :

எனது கருத்தை எவரும் விளங்கிக்கொள்ளவில்லை. ஜனங்கள் நினைக்கிறார்கள் இது தொழுகைக்கு அழைக்கும் இயக்கமென்று! நான் சத்தியமாக சொல்கிறேன். இது ஒரு போதும் தொழுகைக்கு அழைக்கும் இயக்கமல்ல மாறாக புதிய ஒரு கூட்டத்தை உண்டாக்குவதே இதன் நோக்கம். ***(தீனி தஃவத், பக் - 205)***

ஆகவே, சகோதரர்களே! எச்சரிக்கையாக இருங்கள். இல்யாஸின் தப்லீக் இயக்கத்தின் உண்மை நோக்கம் வஹ்ஹாபிய கொள்கைகளை பரப்புவதே, இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. வழிகேடர்களின் இயக்கத்தில் சேர்ந்து நஷ்டவாளி ஆகிவிடாதீர்கள். அதில் சேர்ந்து இருந்தால் அதனை விட்டும் உடனடியாக நீங்கி விடுங்கள். தாய்மார்களே! உங்கள் பிள்ளைகளைத் தொழச் சொல்லுங்கள், குர்ஆன் ஓதச் சொல்லுங்கள், இஸ்லாத்தை பேணச் சொல்லுங்கள், ஹதீஸ் ராத்தீபு மஜ்லிஸ்களில் கலந்து கொள்ளச் சொல்லுங்கள். தப்லீக் கூட்டத்திற்கு போக வேண்டாம் என்று அவர்களை தடுத்துவிடுங்கள்.

இறைவா...!

இருலோக இரட்சகர் ரஸுலே கரீம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பொருட்டைக் கொண்டு இத்தகைய கூட்டங்களிலிருந்து எங்களையும் எங்கள் சந்ததினரையும் காப்பாற்றி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் புகழ்பாடி மறுமையில் அவர்களுடனே நாங்கள் இருக்க கிருபை செய்.

வஸ்ஸலாம்! தங்களின்,

***முஹிப்புர் ரஸுல் சங்கம்,***
***கூத்தாநல்லூர், 28-01-1983.***

## நாகூரில் ஹஜ்ரத் அலிமுல்லாஹ் ஷா தர்காவின் புணர் நிர்மாணமும் மத நல்லிணக்கமும்...!

தமிழக வலிமார்களின் தலைமை பீடமாம் நாகூர் மாநகரில் ரியல் எஸ்டேட் உரிமையாளர்கள் வாங்கிய நாகப்பட்டிணம் வட்டம், நாகூர் கிராமம், வார்டு எண்:5, பிளாக் எண்:2382 என்ற நிலத்தில் முன்பே தர்கா ஒன்று இருந்தது.

அது நாகூர் நாயகத்தின் ஃபகீர்களான ஹஜ்ரத் அலிமுல்லாஹ் ஷாஹ் காதிரி அவர்களின் தர்காவாகும். அதை ஒட்டிய சமாதிகளும் இருந்தன. அதை கிரயம் பெற்றவர்கள் நிலத்தை சமப்படுத்த முயற்சித்த போது தர்காவும் இருந்ததால் பிரச்சனை ஆனது. எனவே ஜமாஅத்தார்கள் நாகப்பட்டிணம் வட்டாச்சியரிடம் மனு கொடுத்தனர்.

புகார் மனுவின் மீது அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த வட்டாச்சியர் திரு தினகரன் அவர்கள் சம்பந்தப் பட்டோரை தன் அலுவலகத்தில் நேரில் விசாரணைக்கு அழைத்தார்.

அமைதிப் பேச்சு வார்த்தையில் வழக்கறிஞர் திரு ஸ்ரீதரன் அவர்களும் மற்றவர்களும் அங்கு அடங்கியிருப்பது மஹான் என்பது தாங்கள் அறியவில்லை என்பதையும், சேதம் ஏற்பட்ட அடக்கஸ்தலங்களை தாங்களே மறு நிர்மாணம்செய்து தருவதாகவும் வட்டாச்சியர் முன்னிலையில் ஒப்புக்கொண்டனர்.

பின் அந்த தர்காவை நிர்வகிக்க ஒரு கமிட்டி அமைக்கவும் எந்தவித சட்ட ஒழுங்கு பிரச்சினைக்கும் இடமளிக்காமல் அமைதியாகவும், ஒற்றுமையாகவும் செயல்பட ஏக மனதாக முடிவு செய்யப்பட்டு வட்டாச்சியர் முன்னிலையில் சம்பந்தப்பட்ட நாகூர் நகர காவல் ஆய்வாளர் திரு பழனிசாமி, வழக்கறிஞர் திரு ஸ்ரீதரன், ஜனாப் சுல்தான், ஜனாப் சாதிக், ஜனாப் அமீன், ஜனாப் அப்துல் ஹலீம் சித்தீக், ஜெஹபர் சாதிக் சாஹிபு, ஜனாப் பாக்கர் அலி, ஜனாப் அஹமத் எஹ்ஸானுல்லாஹ் மரைக்காயர் ஆகியோர் கையொப்பமிட்டனர்.



**ஒப்புதல் மனு**

பின் முடிவுகளின் படி தர்கா ஷரீஃப் நிர்மாணிக்கப்பட்டு கொடியேற்ற விழா 06.08.2010 வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்றது.

விழாவிற்கு வழக்கறிஞர் தலைமை தாங்க வட்டாச்சியர் திரு தினகரன், காவல் ஆய்வாளர் திரு பழனிசாமி, உட்பட அனைவரும் கலந்து கொள்ள ஹாஜி கலீபா சாஹிப் காதிரி அவர்கள் துஆ ஓத, ஹாஜி எஹ்சானுல்லாஹ் மரைக்காயர் அவர்கள் கொடியினை ஏற்றி வைக்க ஜாதி மத பேதமின்றி அனைவரும் மஹான் அவர்களின் அருளைப் பெற்று அமைதியாக திரும்பிச் சென்றனர்.

மஹான்களின் தர்காக்களை ஏளனம் செய்யும் இந்த தவ்ஹீது வலாக்களை நொந்து கொண்டும், தர்கா மஹான்களின் மகிமை அறிந்து அவர்களை கண்ணியப்படுத்தும் உயர்ந்த உள்ளம் கொண்ட மாற்று மத சகோதரர்களை மெச்சியும் கூடியிருந்த மக்கள் பேசிக் கொண்டனர். இதைக் கண்டாவது தவ்ஹீது வாலாக்கள் தங்களை திருத்திக் கொள்வார்களா என்பது இஸ்லாமிய சமுதாயத்தின் ஆதங்கமாகவே இருக்கிறது.

இதில் பொறுப்பேற்று துரித நடவடிக்கையை மேற்கொண்ட அரசுத் துறை வட்டாச்சியர், காவல்துறை ஆய்வாளர், வழக்கறிஞர், ஆகியோருக்கு இஸ்லாமிய சமூகம் மன மார்ந்த நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.

**செய்தி : ஆலி ஜனாப் ஹாஜி எஹ்ஸானுல்லாஹ் மரைக்காயர் - நாகூர் ஷரீஃப்**



# احاديث النبي صلى الله عليه وآله وسلم

## மாநபியின் மணிமொழிகள்

சிஹாசித்தா



### ஹஜ்ரத் அலியின் போர் வாள் ஜுல் ஃபிகாரே ஹைதரீ :

ஹஜ்ரத் இமாம் அபூ ஜாஃபர் முஹம்மத் பாகர் பின் அலி அவர்கள் அறிவிக்கிறார்கள் பத்ரு யுத்த நாளில் ரிஸ்வான் என்ற பெயருள்ள மலக்கு வானத்திலிருந்து சத்தமாக முழங்கினார்

**ஜுல்ஃபிகாரைத் தவிர வாள் ஏதுமில்லை ஹஜ்ரத் அலியாரைத் தவிர வீரர் யாருமில்லை.**

**(ஆதாரம்: மின்ரியாஜுல் நுஜ்ரா ஃபீ ஃபஜாயில் அஸ்ரா முஹிப்புத் திப்ரீ)**

ஹஜ்ரத் இப்ன இஸ்ஹாக் அவர்கள் தன்னுடைய சீரத் என்னும் நூலில் பத்ரு யுத்த நாளில் பெரும் காற்று வீசிய போது அமீர் அவர்கள் கேட்டார்கள் அசரீரியால் சொல்லப்பட்டது ஜுல்ஃபிகாரைத் தவிர வாள் இல்லை, அலியாரைத் தவிர வேறு வீரர் இல்லை இதை கிஃபாயத்து தாலிபீன் யூசுஃபுல் சுஞ்சி என்ற நூலில் படித்தேன்.

இமாம் அஹ்மத் அவர்கள் தன்னுடைய ஃபஜாயிலில் எழுதுகிறார்கள் சஹாபா பெருமக்கள் கைபர் யத்தத்தின் போது வானத்தில் தக்பீர் முழக்க சத்தம் கேட்டது ஜுல்ஃபிகாரைத் தவிர வேறு வாள் இல்லை அலியாரைத் தவிர வேறு வீரர் இல்லை சஹாபியக் கவிஞர் ஆன ஹஜ்ரத் ஹஸ்ஸான் பின் சாபித் அவர்கள் இதைப் பற்றி கவிதைப் பாட எனக்கு அனுமதி தாருங்கள் என நபிகளாரிடம் கோரிய போது அனுமதி கிடைத்தபின் இப்படி பாடினார்கள்...

### சஹாபி பாடிய கவிதை :

*ஜிப்ரயீல் சத்தமாக கூறினார்கள்...*

*இன்னும் புளுதி அடங்கவில்லை...*

*சஹாபாக்கள் நபிகளாரை சுற்றி அரணாய் நின்றி வில்வீசினார்கள்...*

*ஜுல்ஃபிகாரைத் தவிர வேறு வாள் இல்லை...*

*அலியாரைத் தவிர வேறு வீரர் இல்லை...*

**(ஆதாரம் : தஜ்கிரத்துல் காவாஸுல் உம்மா.)**

### இந்த ஹதீஸைப் பற்றி இமாம்களின் கருத்துக்கள் :

ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் கூறுகிறார்கள். உஹத் யுத்த நாளிலே முஷ்ரிகீன்களின் கொடியை தாங்கி வந்த தல்ஹா பின் அபீ தல்ஹாவை வெட்டி வீழ்த்தினார்கள். அதைப் பார்த்த ஒருவர் கூறினார் ஜுல் ஃபிகாரைத் தவிர வேறு வாள் இல்லை, அலியைத் தவிர வேறு வீரர் அல்லை. இதைக் கொண்டு அல்லாமா சுல்தான் இப்னு ஜவ்ஜி "தஜ்கிரத்துல் காவஸுல் உம்மா" என்ற நூலில் இப்படி கூறுகிறார்கள்...

சிலர் ஜுல் ஃபிகாரைத் தவிர வேறு வாள் இல்லை என்று எழுதியுள்ளதை இது உஹது போர் நடந்த போது நடந்த சம்பவமாக கூறுகிறார்கள். ஆனால் நான் இதை கைபர் யுத்த நாளில் நடந்ததாக கணிக்கிறேன். ஏனெனில் இமாம் அஹமத் பின் ஹம்பல் அவர்கள் தன்னுடைய நூலான மனாகிபில் கைபர் யுத்தத்தில் நடந்ததாக எழுதியுள்ளார். உஹது யுத்தத்தில் இப்படி நடந்ததாக நான் கூற முடியாது. ஹதீதுகளின் நிபுணர்கள் இப்னு அப்பாஸ் அவர்களின் ஹதீஸ்களில் வரக்கூடிய ரிவாயத்து செய்பவர்களின் பட்டியலில் ஈஸா இப்னு மேஹ்ரான் என்பவரைப் பற்றி அவர் வயதில் சிறியவராக இருக்கிறார் என்பதால் இந்த ரிவாயத்து ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதல்ல என்று மறுக்கிறார்கள். ஆனால் கைபர் யுத்தத்தின் போது அறிவிக்கப்பட்டதாக யாரும் மறுத்தார்களில்லை. எனவே இது பத்ரு யுத்தத்தின் போது கூறப்பட்டாலும் மிகத் தெளிவாக கைபர் யுத்தத்தின் அறிவிப்பே ஆகும். **(ஆதாரம் : தஜ்கிரத்துல் கவாஸுல் உம்மா.)**

அல்லாமா யூசுப் அல் குன்சி "ஸவாயிஃப்யீ பாயிதுத் தாலிப்" என்ற நூலில் போரில் இந்த வாள் கிடைத்த தாகவும், அதை நபிகளார் ஹஜ்ரத் அலி அவர்களுக்கு கொடுத்ததாகவும் ஒரு ரிவாயத்தில் குறிப்பிடுகிறார்கள்.

### குர்ஆன் தஃப்ஸீரில் :

குர்ஆனின் விரிவுரையான தப்ஸீர்களில் சுலைமான் நபி அவர்களுக்கு பில்கீஸ் அம்மையார் ஏழு போர் வாள்களை வழங்கினார் என்றும் அதில் ஒரு முக்கிய வாளின் பெயர் ஜுல்பிகார் என்றும் அதுதான் வாழையடி வாழையாய் நபிகள் கோமானிடம் வந்து அலியாரிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும் விவரிக்கப்படுகிறது.

இவைகளைத் தவிர அலியார் அவர்கள் இந்த வாளைப் பற்றி ஒரு ரிவாயத் கூறுகிறார்கள். ஹஜ்ரத் ஜிப்ராயீல் வருகை புரிந்து நபிகள் கோமானிடம் எமன் தேசத்தில் ஒரு சிலை இரும்பில் வைக்கப்பட்டுள்ளது. அலியாரை அனுப்பி அந்த இரும்பை கொண்டு வந்து ஒரு வாள் செய்யும்படி கூறினார்கள். நபிகள் கோமான் கூறியபடி நான் சென்று இரும்பை கொண்டுவந்தேன். அதில் ஒன்றுக்கு "ஜுல்ஃபிகார்" என்றும், மற்றொன்றுக்கு "முகத்தம்" என்றும் பெயர் வைக்கப்பட்டன. அதில் ஜுல்ஃபிகார் வாளை எனக்கு வழங்கினார்கள்.

### ஜன்னத்தின் வாள் :

ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் அவர்கள் ரிவாயத் செய்கிறார்கள். ஜிப்ரயீல் அவர்கள் ஜன்னத்திலிருந்து ஜுல்ஃபிகார் என்ற வாளை கொண்டு வந்து நபிகள் நாயகத்திடம் கொடுத்து மரியாதையாக சலாம் செய்த பின் அல்லாஹ் கூறுவதாக கூறினார்கள்...

மனிதர்களில் யாரும் இந்த வாளை பிடிக்கும் ஆற்றல் உடையவர்களாக இல்லை. ஆனால் தாங்கள் யாரை தங்களின் பிரதிநியாக கருதுகிறீர்களோ உங்கள் அனுமதியுடன் அவருக்கு வழங்குங்கள் அவர் தான் காபிர்களான எதிரிகளை வெட்டி வீழ்த்துவார். அவர் யார் என நபிகளார் கேட்க அவர் ஹஜ்ரத் அலியார்தான் என்று ஜிப்ரயீல் பதில் பகர அதுபோதே நபிகளார் அலியார் அவர்களுக்கு ஜுல்பிகாரை கொடுத்து விட்டார்கள். **(ஆதாரம்: ஜுஹ்ரதுர்ரியாஸ்)**

ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் கூறுகிறார்கள் கைபர் யுத்தம் முடிந்து வெற்றி வீரர்களாக திரும்பிய பொழுது ஹஜ்ரத் அலியாரின் கையில் இந்த ஜுல்ஃபிகார் வாள் இருந்தது. அதை அவர்களின் துணைவி யாரான சொர்க்கலோக தலைவி அன்னை ஃபாத்திமாவிடம் காட்டி இதைக் கொண்டு நான் போர்களில் வெற்றி பெற்றேன். கைபர் யுத்தத்தில் மாபெரும் வெற்றி கிட்டியது என்று சிலாகித்து கூறியபோது அன்னை ஃபாத்திமா அவர்கள் பொன்முருவல் பூத்தார்கள். அதைக் கண்டு ஓ! ஃபாத்தி மாவே இந்த ஜுல்ஃபிகாரின் மேன்மை யை முன்பே அறிந்திருக்கிறீரா? என்று கேட்க அன்னை அவர்கள்... நீங்கள் அதை அறிவதற்கு முன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியும். சொர்க்க லோகத் தலைவியின் இந்தக் கூற்றைக் கேட்டு அலியார் ஆச்சரியமுற்றவர்களாக நேராக நபிகள் கோமான் அவரிடம் சென்று நடந்ததை கூறினார்கள்.

### மிஃராஜில் பார்த்த வாள் :

நபிகளார் நேராக அன்னை ஃபாத்திமாவிடம் வந்து நீர் எப்படி அதை அறிந்தீர்கள் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன் என்று கேட்க, அதற்கு அன்னை ஃபாத்திமா அவர்கள், யா ரஸுலல்லாஹ்! தாங்கள் வானத்திற்கு மிஃராஜ் அழைக்கப்பட்ட போது ஜிப்ரயீலைப் பார்த்து எல்லாம் வல்ல அல்லாஹ் ஓ, ஜிப்ரயீலே! நீர்

தொடர்ச்சி 13 ஆம் பக்கம் காண்க...

**சவூதி, யஹூதி அமெரிக்க குட்டையில் ஊறிய மட்டைகள்...**
**அமெரிக்க எஜமானுக்கு குரங்கு சலாம் போடும் வஹ்ஹாபிகள்...**
**தாலிபான் சாத்தான் இஸ்லாமிய ஷரீஅத் வேதம் ஓதுகிறது...**
**கோவணாண்டியின் கடிதம் சோனியாவின் குமாஸ்தாவிற்கு...**
**அமெரிக்காவுக்கு சலாம் போடுவதில் சிறந்த நாடு நம் இந்தியாவா? சவூதியா? ஒட்டகனார் கமண்ட்ஸ்...**

*“யார் அங்கே! வா இங்கே!! வந்தேன் எசமான்!!! போடு தோப்புகர்ணம்! என்னிக்கோங்க சாமி...”*

நாம் ஏதோ நாடக கொட்டாய்க்கு வந்து விட்டோமா திரும்பவும் ஒரு முறை விலாசத்தை சரி பார்த்துக் கொண்டோம். ஒட்டகனார் கூடாரம் ; ஹிஜாஸ் மாகாணம் ; (சவூதிய வஹ்ஹாபிகள் வரும் முன் மக்கா மதீனா உள்ளடங்கிய பகுதிக்கு ஹிஜாஸ் மாகாணம் என்று தான் பெயர்) அரேபிய பாலைவனம் ; அட்ரஸ் எல்லாம் சரியாத்தானே இருக்கு! லேசாக தொண்டையை கணைத்துக் கொண்டு பணிவாக சலாம் கொடுத்தோம். பதில் சலாம் கூறிய ஒட்டகனாரை என்ன டிராமா ஒத்திகையா படுஜோரா இருக்கே! நமக்கும் சொல்லும் என்றோம்.

*வேற ஒன்னுமில்லை சவூதி அரசின் எஜமான் அமெரிக்கா தன் கள்ளக் குழந்தையான யஹூதி இஸ்ரேல் நாட்டுக்கு தன் வான் எல்லை வழியாக ஈரானை தாக்கலாம் என்று அனுமதியளித்துள்ளது. அதைத்தான் ஊர் உலகுக்கு புரியும் படி ஆண்டான் அடிமை பாணியில் விளக்கிக் கொண்டிருந்தேன் என்றார்.*

சபாஷ் தொடரட்டும் என்று ஆர்வம் ஊட்டினோம்...

*1800 களிலிருந்தே வஹ்ஹாபிய இயக்கமும், சவூதி குடும்பமும் பிரிட்டிஷ் ராணிக்கு பல்லக்கு தூக்கியது. இப்போது அமெரிக்காவுக்கு பணிவிடை செய்வது பெரிய ஆச்சரியமான விஷயமல்ல.*

*நான் காலம் காலமாக சொல்லி வருகிறேன். சவூதியும், யஹூதியும், வஹ்ஹாபியும் தமிழக பாணியில் சொல்ல வேண்டும் என்றால் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். அவர்களின் இந்திய அடிவருடிகளான தேவ்பந்தி, தப்லீகி, நத்வி, தவ்ஹீதி முல்லாக்களுக்கு எல்லாம் கடும் கோபம் வரும். இஸ்லாமிய ஷரீஅத் சட்ட ஆட்சி நடத்தும் சவூதியையா யஹூதி என்கிறாய் என்று அடிக்காத குறையாய் கூப்பாடு போடுவார்கள்.*

*அதுகள் எல்லாம் ஈரானை தாக்க தன் வான் எல்லையை இஸ்ரேலுக்கு தானம் கொடுத்த சவூதியின் வஹ்ஹாபிய முடிவுக்கு என்ன சப்பைக் கட்டு கட்டுமோ, ஈராக் நாட்டையும், ஆப்கானிஸ்தானையும் சீர்குலைத்தாகி விட்டது. (அங்கு என்ன குப்பார்களும், முஷ்ரிக்குகளுமா வாழ்கிறார்கள்?) இப்போது ஈரானின் முறை.*

*ஒரு நூற்றாண்டுக்கு மேலாக அமெரிக்க எஜமானுக்கு குரங்கு சலாம் போட்டே பழக்கப்பட்ட இஸ்ரேலிய வஹ்ஹாபிய சவூதியிடம் வேறு எதை இந்த இஸ்லாமிய உலகம் எதிர்பார்கிறது. இப்போதாவது இஸ்லாமிய உலகம் சவூதியின் யூத இஸ்ரேலிய ஆதரவை கண்டு முழித்துக் கொள்ள வேண்டும்.*

லாகூரில் உள்ள பெரிய தர்காவை வஹ்ஹாபிய தீவிரவாதிகள் தாக்கியுள்ளனரே? அடுத்த மேட்டருக்கு போனோம். *ஆம் பாகிஸ்தானின் மிகப் பழமை வாய்ந்த தர்காக்களில் அதுவும் ஒன்று. ஹஜ்ரத் தாதா கஞ்ஜ்பக்ஷ் ஹஜ்வேரி என்பது ஹஜ்ரத் அவர்களின் புனிதப் பெயராகும். அஜ்மீர் ஹாஜா நாயகம் ரஸூலுல்லாஹ்வின் அனுமதி பெற்று இந்தியாவிற்கு வருகை தரும் வழியில் 40 நாட்கள் சில்லா தவமிருந்து ( சில்லா என்றால் இந்த தப்லீகர்கள் ஊர் மேய்வார்களே அது என்று நினைத்து விடாதே) ஷரீஅத்தை கடுமையாக கடைபிடித்து அல்லாஹ்வின் நினைவில் மூழ்கியிருப்பது.*

*பின் அஜ்மீர் நாயகம் தாதா கஞ்ஜ்பக்ஷ் அவர்களைப் பற்றி இப்படி ஈரடிக் கவிதை எழுதினார்கள். ஏனெனில் ஹாஜா நாயகத்தை விட 3,4 நூற்றாண்டுகள் முந்தைய தர்கா ஷரீஃப் அது...*

گنج بخش فیض عالم مظہر شان خدا     ناقصاں را پیر کامل کاملاں را رہنما

*அல்லாஹ்வின் இறை வெளிப்பாட்டில் ரகசியங்களின் பொக்கிஷங்களை வாரி வழங்குபவர்...*

*கற்றுக் கொள்ள வருவோருக்கு முழுமையான குருநாதர் : தேர்ந்தோருக்கு வழிகாட்டியாய் திகழ்பவர்...*

என்று இந்திய வலிமார்களின் தலைமை பீடமான அஜ்மீர் ஹாஜா நாயகமே புகழும் போது அவர்களின் மேன்மை எப்படி பட்டதாய் இருக்கும். அங்கு போய் 2.07.2010 வியாழக்கிழமை மக்ரிபுக்குப் பின், வெள்ளி ராவிலே மக்கள் எல்லாம் புனித குர்ஆன், சலவாத்து, பாத்திஹா ஓதி தத்தமது நாட்டங்களையும் முராதுகளையும் முறையிட்டு துஆ கேட்கும் நேரத்திலே ஆயிரக்கணக்கில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் வயதானோர் என்று கூடியிருக்கும் வேலையிலே தாலிபான்கள் தற்கொலை தாக்குதல் நடத்தினார்கள் என்றால் இதைவிட கோழைத்தனம் வேறெதும் உண்டா? உயிரிழந்தவர்களில் ஏராளமான பெண்களும் குழந்தைகளும் அடங்குவர். இதில் மகா கேவலம் என்னவென்றால் வஹ்ஹாபிய தாலிபான்கள் பக்காவாக இஸ்லாமிய ஷரீஅத்தை நிலை நாட்டுவார்களாம். இங்குள்ள தேவ்பந்து முல்லாக்கள் கொக்கரிக்கின்றனர்...

ஓர் புனித இடத்தில் இரவு நேரத்தில், வயதானவர்கள், பெண்கள், குழந்தைகள், குர்ஆன், சலவாத்து ஓதும் போது, முஸ்லிம்களை கொத்தாக கொள்வது தான் பக்கா இஸ்லாமா? தாலிபானின் வஹ்ஹாபிய ஷரீஅத்தா? சாத்தான் வேதம் ஓதுகிறது என்பது இது தானா?

அனல் பறக்கும் செய்திகள் சொன்னவரை இளநீரை ஸ்ட்ராவுடன் நீட்டினோம். ஸ்ட்ராவை தூக்கி வீசியவர் பிஸ்மி சொல்லி குடிக்க ஆரம்பித்தார். ஒரு தென்னந்தோப்பு இளநீர் தீர்ந்தபின் யே......வ் ஏப்பம் விட்டு அல்ஹம்து லில்லாஹ் சொன்னார்.

நம் இந்தியா, அமெரிக்காவுக்கு சவூதி போல் சலாம் போடுவதில்லை என்கிறீரா...? என்று ஒட்டகனாரின் வாயைக் கிளறினோம். *ஹஹ்... ஹஹ்...ஹா என உரக்க சரித்தவர் நல்லா சொன்னே போ...*

*10.07.2010 பசுமை விகடனில் கோவணாண்டியின் கடிதம் பிரதமருக்கு இப்படி ஆரம்பிக்கிறது...*

*கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்யும் சோனியாவின் குமாஸ்தா பாரதப் பிரதமர் மன்மோகன் சிங்ஜி அவர்களுக்கு வணக்கம் சொல்லிக்கறேனுங்கோ! என்று தொடர்ந்து...*

*ஒங்க கூட்டாளி அமெரிக்க அதிபர் ஒபாமா, இங்கிலாந்து எண்ணெய் கம்பெனி கடலில் குழாயைப் போட்டு எண்ணெய் எடுத்த போது திடீர் என்று குழாய் வெடித்து கடல் தண்ணீர் முழுக்க எண்ணெயா மிதக்குது இதனால் கடல் வாழ் பிராணிகளும், கடலோரம் வசிக்கிற பறவைகள் உசிர விட்டுட்டு இருக்குதுங்க...*

*இது தெரிஞ்சதுமே கழுத்துல கத்திய வெப்பேன், பூட்ஸ் காலை வச்சி நொறுக்குவேன்னு உருட்டி மிரட்டி 15 நாளைக்குள்ள பலகோடி நஷ்டஈடு வாங்கிட்டாரு ஒபாமா...*

*இத்தனைக்கும் அங்கு ஆபத்து கடல்வாழ் பிராணிகளுக்கு தான். அதுக்கே அந்த ஆளு தையா தக்கானு குதிச்சதுல தன்னால வழிக்கு வந்துடுச்சு இங்கிலாந்து.*

*ஆனா அந்த அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ரசாயனக் கம்பெனியாலே இங்க நம்ம ஊரு போபால்ல 20 ஆயிரம் பேர் செத்துப் போனாங்க... 5 லட்சம் பேர் நடைபிணமா வாழ்ந்துட்டு இருக்காங்க, தலைமுறை தாண்டியும் அதோட பாதிப்பு தொடர்ந்துகிட்டு*

இருக்கு. ஆனா அதுக்கு காரணமான சண்டாளனுங்களை சட்டை பிடிச்சு உலுக்க வேண்டிய ஒங்க முன்னோருங்க சல்யூட் அடிச்சி பல்லக்குல (விமானம்) ஏத்தி கொண்டுபோய்யில்ல காப்பாத்தியிருக்காங்க....

இந்த அநியாயங்களை எங்கே போய் சொல்ல என்று நிறுத்தியவரை அப்போ அமெரிக்காவுக்கு சலாம் போடுறதுல சாலச் சிறந்த நாடு இந்தியாவா? சவூதியா?

ஆமா! ஆமா!! உங்க ஊருக்குப் போய் சாலமன் பாப்பையா, லியோனியைக் கூட்பிட்டு பட்டிமன்றம் நடத்தி முடிவை எனக்கு அஞ்சல் அட்டையில் எழுதிப்போடு என விரட்டாத குறையாக நமக்கு விடைகொடுத்தார் ஒட்டகனார்.

## தீய வஹ்ஹாபியர்களின் பரிணாம வளர்ச்சியின் சுருக்கம்...

### இஸ்லாமியர்களின் பொற்காலம்...

ஒரு காலமிருந்தது... முஸ்லிம்களின் பொற்காலமாக ஷரீஅத் சட்டங்களின் பேணுதலும், நடைமுறைகளையும், பின் பற்றி அமைதியான சமூகமாக ஒற்றுமையுடன் தலை நிமிர்ந்து முஸ்லிம்கள் வாழ்ந்தார்கள்.

நபிகளாரின் காலம் தொட்டு கடைபிடித்து வந்த நல் அமல்களான மீலாதும், மௌலூதுமின்றி எந்த நிகழ்ச்சியும் நடைபெற்றதே இல்லை. மௌலூது ஓதும் குழுக்கள் எந்த நாளும் நிகழ்ச்சிகள் இல்லாமல் இருந்ததில்லை. குழந்தை பிறந்தால் மகிழ்ச்சியில் மௌலூது. பெயரிடும் சந்தோஷத்தில் மௌலூது, புதுமனை புகு விழாவிற்கு மௌலூது. உருஸ் கந்தூரிகளில் மௌலூது, இறந்தோரின் நாற்பதிற்கு மௌலூது, மீலாது மாதமும், முஹ்யித்தீன் ஆண்டகை மாதமும், மௌலூதோ மௌலூது. எல்லோரு டைய முகத்திலும் இறை பக்தியும், அவனது ரஸுலான நபிகள் கோமான் கண்மணி நாயகத்தின் நேசத்தால் துடிக்கும் இதயங்களும், இறை நேசச் செல்வர்களாம் வல்ல வலிமார்களின் உளப்பூர்வமான மேன்மையும், குடிக் கொண்டு எந்தவித மார்க்கப் பிரச்சனையும் இன்றி விட்டுக்கொடுத்து பெரியோர்களின் பேச்சுக்கு கட்டுப் பட்டு இளைஞர்கள் துடிப்புடன் பணியாற்றி எல்லா நிலைகளிலும், மேன்மை மிக்க சமூகமாக ஒற்றுமையுடன் முஸ்லிம்கள் வாழ்ந்து வந்தார்கள்.

இந்த இறை பக்தியும் ரஸுலின் மேன்மையும், வலிமார்களின் நேசமும் ஏற்படுத்திய ஒற்றுமை ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு உறுத்தலாக இருந்தது. எனவே முஸ்லிம்களின் ஒற்றுமையை குலைக்கும் வண்ணம் பதவி மோகம் காட்டி பணத்தின் ஆசையை கூட்டி சில கேடுகெட்ட இன துரோகிகளை தேடி கண்டுபிடித்து நீங்கள் முஸ்லிம்களின் அகாயிது கொள்கை ஏான ஐம்பெரும் கடமைகள், மீலாது மௌலூதுகள் உருஸ் ஃபாத்திஹாக்கள் போன்றவற்றை இழித்துக் கூறுங்கள். நூல்கள் பிரசுரங்கள், கட்டுரைகள், சங்கங்கள், ஜமாஅத்துகள், மதரஸாக்கள் மூலமாக முஸ்லிம்களுக்கு மத்தியில் சந்தேகங்களையும், குழப்பங்களையும் உண்டாக்கி குறிப்பாக நபிமார்கள் மீதும் வலிமார்கள் மீதும், அபாண்டமாகவும், இட்டுக் கட்டியும் அவமரியாதை ஏற்படுத்தும் படியும் மக்களை குழப்பு மாறும் கைக் கூலிகளைக் கொண்டு ஏவப்பட்டார்கள்.

### வஹ்ஹாபியத் திணிப்பு...

ஏனெனில் வெள்ளைத் தோலும், கருப்பு உள்ளமும் கொண்ட பரங்கியார்கள் எல்லாவித முறைகளை யும் கையாண்டு வஹ்ஹாபி யத்தின் மூலவரான முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் நஜதியின் கொள்கைகளை பாமர முஸ்லிம்களுக்கு மத்தியில் வாழைப் பழத்தில் ஊசியேற்றுவது போல் பரப்புவதற்கு இன துரோகிகளை உண்டாக்கினார்கள். அரேபியாவில் கருங்காலிக் கூட்டமான இப்னு சவூத் குடும்பத்தினரும் அவரைத் தொடர்ந்து அப்துல் வஹ்ஹாப் நஜதியால் மூளைச் சலவை செய்யப் பட்ட வஹ்ஹாபிய ஆலிம்கள் மூலம் இந்தியாவில் குலாம் அஹ்மத் காதியானி அஷ்ரப் அலீ தானவி ரஷீத் அஹ்மத் கங்கோஹி, இஸ்மாயீல் தெஹ்லவி, சையத் அஹ்மத் ராய் பரேல்வி, காஸிம் நானோத்வி, அஷ்ரப் அலி தானவி, போன்றோர் மௌலானா அபுல் ஹஸன் அலி நத்வி, அபுல் ஆலா மௌதூதி, ஜகரிய்யா காந்தலவி, போன்றோர் அஹ்மதியா காதியானி, ஜமாஅத்தே இஸ்லாமி, தேவ்பந்திய தப்லீகி ஜமாஅத், நத்வதுல் உலமா என மதரஸாக்களும், சங்கங்களும், கூட்டங்க ளும் ஏற்படுத்தி அதன் பரிணாம வளர்ச்சியாக தாலிபான்கள் லஷ்கரே தய்யிபா, பின் லாதின் முல்லா உமர் என்ற தீவரவாத குழுக்கள் இஸ்லாத்தை கூறு போட்டது மட்டுமின்றி இஸ்லாத்தின் பேரிலேயே களங்கத்தை ஏற்படுத்த எத்தனிக் கிறார்கள். அதன் தாக்கமாக தமிழகத்தில் இன்றைய பல மதரஸாக்களும் வஹ்ஹாபிய சித்தாந்தத் தையே இஸ்லாம் என்ற ரீதியல் தேவ்பந்திய தப்லீகி, நத்வி போன்றோரின் ஊடுருவலால், தமிழகத்தின் தாய் மதரஸாவாகிய பாக்கியாதுஸ் ஸாலிஹாத் வஹ்ஹாபிய ஆக்டோபஸ் கரங்களில் சிக்கித் தவிக்கும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது. தமிழக ஜமாஅத்துல் உலமாவும், இந்த வஹ்ஹாபிய சித்தாந்தத்தின் கோரப் பிடியில் இருந்து தப்பிக்க முடியவில்லை.

கலீல் அஹ்மத் கீரனூரிகளும், ஜாக்குகளும், சிமிகளும், Popular friends of India, தவ்ஹீத் வாதிகள் என்று பரிணாமம் பெற்று ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து அல்லாஹ்விற்கே கை கால் உருவம் உண்டு என்ற வஹ்ஹாபிய கொள்கை திணிப்பு இன்று தமிழகத்தில் உலாவர தொடங்கிவிட்டது.

எனவே இஸ்லாமிய சமூக பாமர மக்கள் ஆதம் அலா நபியினா அவர்கள் காலம் தொட்டு கியாமத் நாள் வரை அல்லாஹ்வின் மார்க்கமான இஸ்லாத் தின் உருவமற்ற ஓரிறைக் கொள்கைக்கே வேட்டு வைக்கும் வஹ்ஹாபிய சித்தாந் தத்தை விட்டு ஒதுங்கி இஸ்லாத்தின் இறுதி தூதர் நபிகள் கோமான் கண்மணி நாயம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் ஆழ்ந்த நேசத்தை நெஞ்சில் நிரப்பி இறை நேசச் செல்வர்களாம் வலிமார்களின் மேன்மை யை மனதில் தாங்கி பரிசுத்த தூய சுன்னத் வல் ஜமாஅத் கொள்கைகளில் சூஃபியாக்களின் அமைதியோடு இறுதி மூச்சு வரை எல்லா சமூகங்களோடும் இணக்கமாக வாழ வல்ல ரஹ்மான் கிருபை செய்ய துஆ கேட்போமாக.

## வலிமார்களைப் பற்றி வேண்டாம் சீரியல்..!

ஹைதராபாத் E.TV.தொலைக் காட்சிக்கு சுன்னத் வல் ஜமாஅத்தாரின் வேண்டுகோள். அரசின் உருது தொலைக் காட்சி ஹைத்ராபாத் E.TV. பிரிவு இஸ்லாத்தின் புனிதம் காட்டுகிறோம் என்ற பெயரில் பஹ்லுல் தானா என்ற வலியுல்லாஹ் வின் சூஃபியத் நடைமுறைகளை சீரியலாக படம் பிடிக்கிறோம் என்ற முயற்சியில் இறங்கி அதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதைக் கண்ட அன்ஜுமனே ஈமான் சங்கம் பரேல்வி ஷரீஃபிலிருந்து தன் கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளது.

எக்காரணம் கொண்டும் வலிமார்களைப் போல் எந்த நடிகரை யும் நடிக்க வைக்கக் கூடாது என்றும் இஸ்லாத்தில் உருவ வழிபாட்டுக்கு கிஞ்சிற்றும் இடமில்லை ஆதலால் கண்ட கண்ட நபர்களை வலிமார்களின் உருவத் தோற்றத்தில் நடிக்க வைப்பது எந்த இஸ்லாமியனும் ஏற்றுக் கொள்ள மாட்டான் என்றும் இன்று பஹ்லுல் தானா சீரியல் என்று சொல்லி நாளை நாகூர் நாயகம், காஜா நாயகம் கௌது நாயகம் என்று தொடர்ச்சியாக இஸ்லாத்தின் அடிப்படை கொள்கைகளில் ஆணிவேரிலேயே வென்னீர் பாய்ச்சும் நிலையில் கொண்டு போய் விட்டுவிடும்.

எனவே E.TV. வலிமார்களின் வாழ்க்கையை சீரியலாய் எடுக்கும் முயற்சியை உடனடியாக கைவிட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

**நன்றி : கன்ஜுல் ஈமான் மாத இதழ், செப்டம்பர் 2010**

**4 ஆம் பக்க தொடர்ச்சி...**

பெற்றால்தான் அது இயலும்!

கண்மணி **முஹ்யித்தீன் பிரபு** அவர்கள் கர்க் கானகத்தில் நுழைந்து 11 ஆண்டுகள் ஆகிவிட்டன - பல அற்புத சாதனைகள் நிகழ்ந்து விட்டன!

இனி என்ன வேண்டும்?

இனிதான் அசலான தவராஜ யோக சாதனைகள் ஆரம்பமாக வேண்டும் -

நாம் தொழுவதற்கு முன்னால் உடல் தூய்மைபெற ஒலு செய்கிறோம் - அதைப் போல -

தூய்மையே உருவான மஹா மஹா குத்தூஸ்ஆன அல்லாஹ்வை நெருங்குவதற்குரிய முழு தகுதியான உடல் உள்ளம் உயிர் ஆன்மா அனைத்தையும் இந்த 11ஆண்டு காலத்தின் தவயோக சாதனைகளின் மூலமாக தன்னை பரிபூர்ண தூய்மையாக்கிக் கொண்ட **குத்தூஸ் முஹ்யித்தீன் பெருமான்** அவர்கள் -

**புருஜுல் அஜமியில் லிகா திவ்விய தரிசனம்...**

இனி ஒப்பற்ற உன்னதமான மகா வேள்வியான இபாதத்தின் மூலம் தன் உடலையும் உயிரையும் ஆன்மாவையும் ஒருங்கே அல்லாஹ்விலே அர்ப்பணித்து அவனின் லிகா என்ற திவ்விய தரிசனத்தைப் பெற புருஜுல் அஜமி கோட்டையின் உள்ளே சென்று விட்டார்கள்

பகலிலேயே அதன் பக்கமாகச் செல்ல யாரும் அஞ்சக் கூடிய இருண்ட சூழ்நிலையும் விஷ ஜந்துகளும் நிறைந்த பல்லாண்டுகளாக பாழடைந்த அந்த கோட்டையிலே 11 ஆண்டு காலம் தங்கி தன்னிகரற்ற தவராஜ யோக சாதனைகளைப் புரிந்தார்கள்

அன்று புருஜுல் அஜமியிலே **காதிரும் அப்துல் காதிரும்** சந்தித்துக் கொண்டார்கள் என்று ஒரு ஞான சீலர் பிற்காலத்தில் விளக்கமளித்தார்

புருஜுல் அஜமியிலே இந்த 11 ஆண்டும் உண்ணவும் இல்லை பருகவும் இல்லை உறங்கவும் இல்லை ஊண் உறக்க உணர்ச்சிகளற்ற உன்னதப் பெருந்தவம்.

புருஜுல் அஜமியிலே விவரிக்க இயலாத சூழ்நிலை - மோனத் தவத்தில் மூழ்கித் திளைத்து மூச்சடக்கி செயலற்று மரக்கட்டையைப் போல் கிடந்து எப்போதாவது திடீரென்று கண் விளித்து எதிரே நோக்கினால் முஹ்யித்தீன் பிரபு அவர்களின் ஞான தீட்சண்ய ஜலாலியத் அக்னிப் பார்வை பட்ட இடமெல்லாம் பற்றி எரியும் - எதிர் வரும் பறவைகளும் மிருகங்களும் பதறித் துடித்து ஓடி ஒளியும்!

அடக்கி வைக்கப்பட்ட அணுவைப் பிளந்தால் அதன் ஆற்றல் ஆர்ப்பரித்து அகிலத்தை அழிக்க வல்லதாவதைப் போல -

அணுவைவிட ஆயிரமாயிரம் பங்கு ஆற்றல் மிக்க ஆன்மாவின் மோனத் தவத்தில் மூச்சடக்கி அடக்கி வைக்கப்பட்ட **மெய்ஞான தவராஜ சிங்கம் முஹ்யித்தீன் பிரபு** அவர்களின் ஆன்மாவின் பேராற்றல் பெரும் உக்கிரத்தோடு பீறிட்டடித்து பிரளயத்தையே உண்டாக்க வல்லதாக பிரதிபலித்தது!

சில நேரங்களில் ஆண்டகை அவர்களின் அகமிய பேராற்றல் பீறிட்டெழுந்து பெரும் சூராவளியைப் போல் சுழன்றடித்து காட்டில் உள்ள பெரும் மரங்களையெல்லாம் வேரோடு பெயர்த்தெறிந்து விடும்!

இந்நிலையில் ஆண்டகை அவர்கள் வானவெளியை நோக்கி விட்டால் வானத்தின் நட்சத்திரங்கள் கூட எரிந்து விழுந்திருக்கின்றன!

புருஜுல் அஜமியின் 11 ஆண்டு முடிவில் முஹ்யித்தீன் பிரபு அவர்கள் தன்னையறிந்து தலைமை நிலைக்கு மீண்டு தன்னிகரற்ற தவராஜ சிங்கமாகத் திகழ்ந்தார்கள்! இந்த தருணத்தில் -

22ஆண்டுகால கடும் தவயோக சாதனைகளும் 40 ஆண்டுகால நெடும் நோன்பும் நிறைவுற்றன -

போதும் - போதும் முழுமையில் முழுமை என்ற இந்த ஈடற்ற உயர் நிலையே போதும் - இனி வேறு எதுவும் தேவை இல்லை - இனி உலகியல் பக்கம் திரும்பலாம் என்று ஆண்டகை அவர்களுக்கு அறிவிக்கப் படுகிறது -

புருஜுல் அஜமியிலே ஆண்டகை அவர்களின் பார்வையில் - வித விதமான உணவு பண்டங்கள் காட்சியளிக்கின்றன -

முஹ்யித்தீன் எஜமான் தானாக எதையும் எடுத்து உண்ண விரும்பவில்லை -

இறையருள் தகுதிக்குரிய யாரேனும் ஒரு இறைநேசர் தனக்கு உணவூட்டி இந்த (40 ஆண்டுகால) நெடும் நோன்பை முடித்து வைக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள்

**கிர்காவும், கிலாஃபத்தும்...**

அடுத்த நிமிடமே 83 வயதான மஹான் ஷைகுனா அபூ சையது மீரான் முபாரக் மக்ஜூமி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் புருஜுல் அஜமியின் உள்ளே வந்து எஜமானுக்கு ஸலாம் கூறிவிட்டு, அப்துல் காதிரே! அன்பு கூர்ந்து நம் கான்காஹ் (தவசாலை)வுக்கு வாருங்கள், நான் தங்களுக்கு உணவூட்டி தங்கள் நெடும் நோன்பை முடித்து வைக்கிறேன் என்று கேட்டுக் கொள்கிறார்கள்

சரி என்ற எஜமான் உடனே புறப்படவில்லை அடுத்து கிலுறு அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தோன்றி, அப்துல் காதிரே! அந்த பெரியாரின் தவச் சாலைக்குச் செல்லுங்கள் அவர்தான் அதற்குரியவர் அல்லாஹ்வின் நாட்டமும் அது தான் என்று கூறிய பிறகே முயித்தீன் எஜமான் பக்தாது மாநகரில் உள்ள அந்த கான்காஹ்வுக்குப் புறப்பட்டார்கள்

**அன மதீனதுல் இல்மி**
**வ அலியுன் பாபுஹா**

நான் அந்த கல்வியின் பட்டிணமாக (மஅரிஃபா கோட்டையாக) இருக்கிறேன். அலி அதன் தலைவாயிலாக இருக்கிறார்கள்

என்று அண்ணல் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருள்கிறார்கள்.

**அவ்வலுத் தீனி மஅரிஃபதுல்லாஹி**

என்ற திருநபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் திரு மொழிப்படி -

இஸ்லாத்தின் முதன்மையாக- முதுகெலும்பாக- உயிர் மூச்சாக விளங்கும் மஅரிஃபா கோட்டையாக அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும், அதன் தலைவாயிலாக அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களும், அடுத்து அதன் வழிவழி கலீஃபா பொறுப்பாளர்களாக இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு, இமாம் ஜைனுல் அபிதீன் ரலியல்லாஹு அன்ஹு, இமாம் பாக்கர் ரலியல்லாஹு அன்ஹு, இமாம் ஜாபர் சாதிக் ரலியல்லாஹு அன்ஹு, ஷைகுனா சிர்ரியுல் சிக்தி ரலியல்லாஹு அன்ஹு, ஷைகுனா மஅரூஃப் கர்கி ரலியல்லாஹு அன்ஹு, சையதினா ஜுனைதுல் பக்தாதி ரலியல்லாஹு அன்ஹு , ஷைகுனா அபூ பக்கர் ஷிப்லி ரலியல்லாஹு அன்ஹு என்ற வரிசையில் ஷைகுனா அபுல் ஹஸன் அலி குரைஷி ரலியல்லாஹு அன்ஹு அவர்களை அடுத்து 13வது தலைமுறையாக ஷைகுனா அபூசையத் மீரான் முபாரக் மக்ஜூமி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வருகிறார்கள்.

அவர்கள் கரங்களில் இருந்து தான் (14வது தலைமுறைக்கு) முஹ்யித்தீன் பிரபு அவர்களுக்கு ஞான சாம்ராஜ்யத்தின் நிறைவான பொறுப்பு வரவேண்டும். அவர்கள் தான் முஹ்யித்தீன் எஜமானை தங்கள் கான்காஹ்விற்கு அழைத்தார்கள்.

முஹ்யித்தீன் பிரபு அன்று இரவு நேரத்தில் அங்கு போய் சேர்ந்தார்கள். அங்கு அவர்களை எதிர்பார்த்து ஷைகுனா அவர்களும், பல நூற்றுக் கணக்கான இறைநேசச் செல்வர்களும், முரீதுகளும் அங்கே கூடியிருந்தார்கள்-

முஹ்யித்தீன் பிரபு அவர்களுக் காக அபூ சையத் முபாரக் மக்ஜூமி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் விதவிதமான உணவுகளை எல்லாம் தயார் செய்து வைத்திருந்தார்கள் - எஜமான் வந்ததும் பெரும் மகிழ்ச்சியோடு வரவேற்ற ஷைகுனா எஜமானை அமர வைத்து பெற்ற மகனுக்கு தாய் ஊட்டி விடுவதைப் போல தன் கரங்களால் விதவிதமான உணவு வகைகளை தன் நெஞ்சம் நிறைய எஜமானுக்கு ஊட்டிவிட்டு ஆண்டகை அவர்களின் 40 ஆண்டு கால நெடும் நோன்பை முடித்து வைத்தார்கள்.

அடுத்து - மீரான் மக்ஜூமி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இஸ்லாமிய ஞான சாம்ராஜ்யத்தின் பேரரசரான பேரொளி அண்ணல் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் புனித சிரசை அலங்கரித்த **தர்கத் மகுடமான 16** முழம் கொண்ட **பச்சை நிற தலைப் பாகையை** தங்கள் சிரசின் மீது கட்டி அதை அப்படியே எடுத்து எல்லையற்ற பெரும் மகிழ்ச்சியுடன் எஜமான் **முஹ்யித்தீன் ஆண்டகை** அவர்களின் புனித சிரசின் மீது அணிவித்துவிட்டு -

அப்துல் காதிரே! **குர்பே இலாஹி** என்ற இறைநேச நெருக்கத்தை பரிபூர்ணமாக அடைந்து விட்ட தங்களுக்கு இந்த **கிர்கா** தலைப்பாகையையும், **கிலாஃபத்** பொறுப்பையும் இந்த அடியானின் கைகளால் அளிக்கச் செய்த அல்லாஹ்விற்கே புகழனைத்தும்.

அப்துல் காதிரே...! அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் புனித சிரசை அலங்கரித்த இந்த கிர்காவை தங்கள் சிரசின் மீது சூட்டுவது என்னுடைய கைகள் அல்ல - அர்ஷின் காவலர் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களு டையதே - தங்களுக்கு இதைச் சூட்டும் போது தங்களுக்கு முன் தோன்றும் உருவம் என்னுடைய தல்ல - ஏந்தல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுடையது தான் என்று கூறினார்கள் -

மெய்ஞ்ஞான திலகம் முஹ்யித்தீன் பிரபு அவர்கள் கனிந்த நன்றி உணர்வுடன் ஷைகுனா அவர்களின் திருப்பாதங்களை முத்தமிட குனிந்த போது -

**தாஹா நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களையே தரிசித்து மெய்சிலிர்த்தார்கள்!**

திடீரென்று அந்த கான்காஹ்வில் ஒரு பிரம்மாண்டமான ராஜாளிப் பறவை சிறகடித்துப் பறந்தது - சர விளக்குகளெல்லாம் அணைந்து விட்டன -

காரிருளில் அனைவருமே திகைத்த போது அந்த நள்ளிரவில் -

திடீரென்று வானில் ஒரு பிரமாண்டமான சூரியன் தோன்றி பிரகாசித்தது - அனைவரும் கண்கள் கூச திகைத்தனர்! அன்று அந்த நேரத்தில் அந்த நள்ளிரவு சூரியனால் பக்தாத் மாநகரமே திகைத்தது!!

**முந்தயவர்களின் கதிரவன்கள் எல்லாம் அஸ்தமித்து விட்டன நமது ஞான சூரியனே மெய்ஞான வானில் இறுதி காலத்திற்குப் பிறகும் நின்று நிலைத்து நிரந்தரமாக ஒளிவீசி பிரகாசித்துக் கொண்டிருக்கும்!**

- முஹ்யித்தீன் பிரபு திருமொழி

**ஆக்கம் : முஹ்யித்தீன் அடிமை முஹ்யித்தீன் ஷாஹுல் ஹமீது காதிரி**

## பாகிஸ்தான் நாட்டு ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் ஒரு பகிரங்க கடிதம்.

பாகிஸ்தானில் முக்கிய பழமை வாய்ந்த நகரங்களில் ஒன்றான லாஹூரில் உலகின் அமைதிக்காகவும் உன்னத நோக்கத்திற்காகவும் ஈ, எறும்புக் குக்கூட தீமை விளைவிக்காமல் சாந்தி, சமாதானம் என ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அல்லாஹ்வின் திருக்கலி மாவை வாயால் மொழிந்து ரஸூலின் இஷ்க் என்ற ஜோதியை நெஞ்சில் தாங்கி மானிடத்திற்கு நல்லதைப் போதித்த மஹான் ஹஜ்ரத் தாதா கன்ஞ் பக்ஷ் ஹஜ்வேரி அவர்கள் ஆவார்கள்.

அண்ணலின் தர்கா ஷரீஃபில் சென்ற மாதம் வெள்ளி இரவிலே பெண் களும், குழந்தைகளும் ஏனைய இஸ்லாமியர்களும், குர்ஆன் ஹத்தம், பாத்திஹா, மீலாது, மௌலூது, சலாம், பைத்து ஓதிக் கொண்டிருந்த முக்கிய நிகழ்வின் போது அமெரிக்க யூத ஆதர வோடு வஹ்ஹாபிய தீவிரவாதிகள் தற்கொலை படை தாக்குதல் நடத்தி அப்பாவிகளை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்த கோழைத்தனத்தை என்ன வென்றுசொல்லுவது. அங்கு கூடியிருந்த அத்தனை முஸ்லிம்களும் வஹ்ஹாபியர் களின் பார்வையில் முஷ்ரிக்குகளாக தென் பட்டது ஏன்?

அப்பாவி பெண்களையும், குழந்தைகளையும், முதியோர்களையும் தற்கொலை படையை ஏவி தாக்குவது தான் இஸ்லாமா? இந்த வெறுக்கத்தக்க வஹ்ஹாபிய தீவிரவாதிகளை உடனடி யாக தேடிப்பிடித்து தக்க தண்டனை வழங்கினாலொழிய இது போன்ற அராஜகங்களும், அடாவடித்தனங்களும் யூத இஸ்ரேலிய அமெரிக்க தூண்டுத லால் வஹ்ஹாபிய கைக்கூலிகள் நடத்திக் கொண்டே இருப்பார்கள். எனவே பாக் பிரதமரும், அரசு துறையும், ராணுவமும் உடனடியாக செயல்பட்டு கொலைகார குற்றவாளிகள் உலகின் முன் நிறுத்தப் பட்டு கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என்று இந்த வஹ்ஹாபிய தீவிரவாதத்தால் தாக்கப்பட்ட மாலே காவூன் ரஜா அகாடமி சுன்னத் ஜமீஅத்துல் இஸ்லாம் சங்கம், ஜமீஅத்துல் ரஜா பரகாத்துல் உலூம், அஷ்ரஃபியா ஃபவுண்டேஷன், தாருல் உலூம் கௌஸுல் ஆஜம், தாருல் அஜ்மதே முஸ்தஃபா, கான்காயே காமி லிய்யா, சூஃபித் தைக்கால் மற்றும் ஏனைய இந்திய முஸ்லிம் சுன்னத் வல் ஜமாஅத்தார் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

மேற்கண்ட கடிதத்தில் மாலே காவூன் நகரத்தைச் சேர்ந்த மார்க்க அறிஞர்கள் உலமா பெருமக்கள், முக்கிய நிர்வாகிகள் நூறு பேர் கையொப்பம் இட்டு பாக் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

**9 ஆம் பக்க தொடர்ச்சி...**

நபிகளாருக்கு ஜன்னத்தில் அவர்களின் உம்மத்துக்காக எல்லா வசதிகளுடன் அலங்கரித்து வைத்துள்ள இடத்தை காட்டுவீராக என்று கூறினான்.

அப்போது ஜிப்ரயீல் அவர்கள் தங்களுக்கு அவ்விடத்தை காட்டியும் இங்குள்ள கனிகளில் இருந்து புசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண் டார்கள். அப்போது தாங்கள் சிகப்பு நிற ஆப்பிள் மரத்தின் கீழ் சென்றீர்கள். அதன் வேர்ப்பகுதியில் ஜுல்ஃபிகார் என்ற வாள் பதியப்பட்டு இருந்தது.

ஜுல்பிகாரைத் தவிர வேறு வாள் இல்லை, அலியைத் தவிர மாவீரர் வேறு யாருமில்லை. அவ்வாள் வைத்திருப்ப வரின் துணைவியார் ஃபாத்திமா ஜெஹ்ரா ஆவார் என எழுதியது உட்பட அதன் மேன்மையை அன்றிலிருந்து நான் அறிவேன். பின் அந்த மரத்திலிருந்து ஆப்பிளை பாதியாகப் பிளந்து தாங்கள் உண்டீர்கள், பாதியை என் தாயார் கதீஜதுல் குப்ரா அவர்களுக்காக வைத்துக் கொண்டீர்கள். என் அன்னையார் அதை உண்டபோது நான் என் தாயாரின் புனித வயிற்றில் கருவுற்றேன். அதன் அடையாள சாட்சி என்னவென்றால் தாங்கள் என் அருகில் அமரும்தோறும் அந்த சொர்க்க ஆப்பிள் மர நிழலில் அமருவதாக உணர்கிறேன் என்று பல முறை கூறினீர்கள். மேலும் என்னிடம் சொர்க்க நறுமணம் கமழுவதாகவும் கூறினீர்கள். இதை செவியுற்ற அண்ணலெம் பெருமானார் நபிகள் கோமான் அவர்கள் நீர் உண்மையைக் கூறினீர் என்று வாஞ்சையோடு கூறி தம் புனித மகளாரின் நெற்றியை முத்தமிட்டார்கள். **(ஆதாரம் : ஜெஹ்ரதுர் ரியாஸ், அஷ் ஷைகு அல் இமாம் தாஜுல் இஸ்லாம் சுலைமான் பின் தாவூத் அஸ்ஸக்கினீ எழுதியது.)**

**இன்ஷா அல்லாஹ் மேலும் மொழிவோம்.....**

# வாருங்கள் ஜியாரத் பயணம் செல்வோம்....
# பார் புகழும் கீழக்கரை பல்லாக்கு வலியுல்லாஹ்...!

அவனிக்கோர் அருட்பிளம்பாய் அருளப்பெற்ற அண்ணல் நபிகள் பெருமான் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் நம் கண்களை விட்டு மறைந்த போது இத்தரணி பின்வருமாறு அலறியது. "இறைவா! இத்தனை ஆண்டுகாலமும் உனது புனிதமிக்க தூதர்களை அனுப்பி என்னை மாண்புபடுத்தினாய் இப்பொழுதோ இறுதி நபியாக வந்துற்ற இறைதூதரும் வானுலகம் சென்று விட்டனரே - இனி யான் பாவிகள் நடமாடும் பாராகவல்லவோ ஆகிவிடுவேன்" என்று ஏங்கி அலறலாயிற்று.

"ஏ மண்ணகமே! கவலையுறுக ; மகிழ்ச்சி பெறுக! இனி மேல் இறைத்தூதர்களை உம்மீது அனுப்பா விடினும் அவர்களின் இதயத்தைப் பெற்ற இறை நேசச்செல்வர்கள் என்னும் அவுலியாக்களை அகிலம் முடியும் வரை அனுப்பிக் கொண்டே இருப்பேன்!" என்று வல்ல நாயன் ஆறுதல் அளித்தான். இதன் அடிப்படையில் இவ்வையகத்தை அழகு படுத்துவான் வேண்டி பல காலங்களில் பற்பல இறை நேசச் செல்வர்களை அருளச் செய்து மாண்பாக்கினான்.

நானும் அபூபக்கரும் ஒரே மண்ணில் படைக்கப்பட்டவர்கள் என அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களால் இயம்பப்பட்ட இஸ்லாத்தின் முதலாம் கலீஃபா அமீருல் முஃமினீன் அபூபக்கர் சித்தீக ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் வழிவழி வந்த மாமேதையே பல்லாக்கு வலியுல்லாஹ் ஆவார்கள்.

## இளமையும் கல்வியும்...

மேன்மை மிகு நூர் முஹம்மத் சாஹிப் அவர்களுக்கும் முஹம்மது ஃபாத்திமா என்னும் மங்கையர்கரசிக்கும் ஹிஜ்ரி 1268ஆம் ஆண்டு ரப்பியுல் அவ்வல் மாதம் 12ஆம் தேதி திங்கட்கிழமை வைகறை தொழுகைக்குப் பின் கீர்த்தி மிகு கீழக்கரையில் திருப்புதல்வராக பல்லாக்கு வலியுல்லாஹ் பிறந்தார்கள். பேரொளியுடன் பிறந்த தம் அழகுத் திருமகனுக்கு நூர் முஹம்மத் சாஹிப் அவர்கள் ஹபீப் முஹம்மத் சதகதுல்லாஹ் என்னும் பெயர் சூட்டினார். பாலகருக்கு மூன்று வயது நிரம்புகின்ற போது இறைவனின் நாட்டப் படி அவர்களின் அன்புத் தந்தை நூர் முஹம்மத் சாஹிப் அவர்கள் அழியும் இவ்வுலகை விட்டு இறப்பெய்தி விடுகின்றனர். தமது பச்சிளம் குழந்தையை கருத்தாக வளர்க்கும் பெரும் பொறுப்பை ஏற்று உயர்ந்த ஒழுக்கத்துடனும் நல்ல பண்புகளுடனும் இறைவணக்கத்தில் இனிமை காணுபவராகவும், இரப்போருக்கு வாரி வழங்கும் வள்ளல் மனம் படைத்தவராகவும் வளர்கின்றனர். அவ்வளவு இளம் பிராயத்திலேயே நற்குணங்கள் குடிகொண்ட வலியுல்லாஹ் அவர்கள் பத்து வயது பூரணமானபோது வான் மறையாம் அல்குர்ஆனை மனனம் செய்து முடித்தார்கள்.

## காரணப் பெயர்...

படிக்கும் காலத்திலேயே பக்தி சிரத்தையுடன் பாடங்களை கற்றுணர்ந்து உய்வு பெற்ற இவர்கள் தங்கள் நண்பர்களான கல்வத்து நாயகம், ஜல்வத்து நாயகம் இவ்விருவர்களுடனும் இணைந்து வலிகள் திலகம் மாமேதை மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களிடம் மார்க்கக் கல்வி பயின்றதுடன் அவர்களையே ஆன்மிக ஆசானாக ஏற்று காதிரிய்யா தரீகாவை பின்பற்றி அவர்களிடம் தீட்சையும் பெற்றார்கள்.

வலிகள் திலகம் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் தங்கள் அன்பை வெளிப்படுத்தும் பொருட்டு ஏ பலாகுத் தம்பியே (வெற்றிக்குரியவரே) என்று அழைத்து வந்தனர். தம் அன்பு ஆசான் அழைத்து வந்த புனைப் பெயரை இவர்களும் பிற்காலத்தில் உவந்து பலாகுத் தம்பி என்றே சொல்லி வந்தனர். மக்களின் நாவுகளில் பலாகுத் தம்பி என்ற உச்சரிப்பு மறைந்து பல்லாக்குத் தம்பி என்று அழைக்கலானார்கள்.

## ஹஜ்ஜை நிறைவேற்றல்...

பல்லாக்கு வலி அவர்களுக்கு 23வது வயது பூரணமானபோது கல்வியில் ஓரளவு கற்றுத் தேர்ந்து இறைவணக்கத்தில் தம்மை அர்ப்பணித்து வாழத் துவங்கினார்கள். தம் அக, புற, ஆசான் மாமேதை மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களுடன் புனிதமிகு ஹஜ்ஜை நிறைவேற்ற மக்கமா நகரை நோக்கி புனிதப் பயணம் மேற்கொண்டனர்.

அல்லாஹ்வின் அருள் இல்லமாம் காபாவில் தனித்திருந்தும், விழித்திருந்தும், பசித்திருந்தும் அல்லும் பகலும் அயராது பல வணக்கங்களை நிகழ்த்தி தம் ஆசானுடன் மகிமை மிக்க மதீனா ஷரீஃப் வந்து சேர்ந்தனர். அரபியிலும், தமிழிலும் கவி புனையும் பேராற்றலைப் பெற்றிருந்த இப்பெருந்தகை அவர்கள் அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை புகழ்ந்து பல புகழ்கவிகளை இசைத்து பூமான் நபிகளின் ஷஃபாஅத்தை வேண்டிய பின்னர் தம் ஆசானுடன் கீழக்கரையை அடைந்தனர்.

## நல்மணமும் இறைத் தொண்டும்...

அண்ணல் பல்லாக்கு வலியுல்லாஹ் அவர்களுக்கு 24ஆம் வயது பூர்ணமடைந்த போது தாஹா நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மேன்மை மிக்க சுன்னத்தின் படி மாபெரும் கொடை வள்ளல் ஹபீப் முஹம்மத் மரைக்காயரின் வழித்தோன்றலிலே வந்துதித்த ஆயிஷா என்னும் மங்கையர்க்கரசியை மணம் புரிந்து கொண்டார்கள். சில நாட்களிலேயே அம்மையார் இறந்துவிடவே மூன்று ஆண்டுகளுக்குப் பின் ஆயிஷா அம்மையா ரின் சகோதரி சையது முஹம்மது நாச்சி என்னும் சேமு நாச்சியாரை மணம் முடித்துக் கொண்டார்கள்.

பல்லாக்கு வலியுல்லாஹ் அவர்கள் காடேகி இறைவணக்கம் நிகழ்த்துவதில் தம் காலத்தை கழித்து வந்தனர் நாற்பது வயதில் உலகப் பற்றை நீக்கி **முர்ஷிதுத் துல்லாபு** என்னும் ஞானம் நிறைந்த நன்னூலை ஆராய்பவர்களாக திகழ்ந்தார்கள். இதன் பின்னர் இறைவன் அருளிய மாபெரும் பேறாகிறய கராமத் என்னும் அதி அற்புதங்கள் அனந்தம் அனந்தம் இவர்களிடமிருந்து உண்டாயிற்று.

## நேர்ச்சை செய்த ஆடு...

ஒரு சமயம் பல்லாக்கு வலியுல் லாஹ் அவர்கள் தம் தோழர்கள் புடை சூழ கீழக்கரைக்கு அருகில் அமைந்திருக் கும் கும்மிடுமதுரை என்னும் சிற்றூருக்குச் சென்றார். அங்கு மந்தை மந்தையாக மேய்ந்து கொண்டிருந்த செம்மறி ஆடுகளில் ஒன்றைச் சுட்டிக்காட்டி "அது நம்முடைய ஆடு அதை அறுத்து சமையுங்கள்!" என்றார். "இது என்ன அநியாயம் இப்படிச் செய்யலாமா?" என்று அலறிய இடையர்கள் தம் எஜமானை அழைத்து வந்து விட்டார்கள். வந்தவனோ பல்லாக்கு வலி அவர்களைக் கண்டவுடன் அவர்களின் காலடியில் வீழ்ந்து மகத்துவப் படுத்தியவனாக "என்ன ஆச்சரியம்! இவர்கள் அறுத்த ஆட்டை இவர்களுக் காகவே நேர்ச்சை செய்திருந்தேன். இது எமக்கும் இறைவனுக்கும் அல்லாது வேறு ஒருவருக்கும் தெரியாது" என்று வியப்புற்றவனாகக் கூறினான். மேலும், "இம் மந்தையிலிருந்து இன்னும் எத்தனை ஆடுகள் வேண்டுமோ அத்தனையும் பிடித்துக் கொள்ளுங்கள்!" என்றான். "நீர் எமக்காக எதை நேரச்சை செய்தீரோ அதைத்தவிர உம்பொருளில் எமக்கு எந்த ஒரு ஆதிக்க மும் இல்லை!" என்று மறுத்து விட்டனர்.

## ஏர்வாடி ஜியாரத்...

இப்பெருந்தகை அவர்கள் பெரியோர்களையும் அறவோர்களையும் கண்ணியப்படுத்தும் இயல்பினராக திகழ்ந்தார்கள். கீழக்கரையிலிருந்து ஐந்து கல் தொலைவிலுள்ள ஏர்வாடி என்னும் ஊரில் சமாதியுற்றிலங்கும் அல்லாமதுல் குத்பு சுல்தான் செய்யது இபுறாஹீம் ஷஹீத் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களை வாரம் தவறாமல் ஜியாரத் செய்பவர்களாக இருந்தனர். இவ்வண்ண லை அதிகமதிகம் நினைத்தாலன்றோ என் அகத்தில் ஏற்பட்ட ஐயங்கள் அனைத்தும் நீங்கி நுஜபாக்களில் (எழுபது இறைநேசச் செல்வர்களில்) ஒருவராக ஆக்கப்பட் டுள்ளேன்! என்று இயம்மியுள்ளனர்.

## குணநலன்கள்...

பல்லாக்கு வலியுல்லாஹ் அவர்கள் விலாயத்தில் குத்புஸ் ஜமான் என்னும் மகுடத்தைப் பெற்றிருந்தனர். பார் போற்றும் பல்லாக்கு வலியுல்லாஹ் அவர்கள் பெரியார்களுக்கு கண்ணியமளிப்பதும், சிறியோர் மீது அன்பு செலுத்துவதும் இவர்களின் இயல்பாக இருந்தன. தம்மிடத்தில் இரப்போருக்கு இல்லையென கூறவியலா மனம் படைத்த இந்நல்லார் அறவழியில் ஈந்திடும் வள்ளல் ஆவார்.

கவிகள் புனைவதில் வல்லவர். இவர் இயற்றிய "அல்லாஹ் முனாஜாத்" மாந்தர்களுக்கு ஏற்படும் எல்லா இடர்களை விட்டும் இறைவனிடம் இறைஞ்சி பிரார்த்தனை செய்த கவித்தொகுப்பு. ஒவ்வொரு வக்தையும் கூட்டுத் தொழுகையுடன் இணைந்து தொழுபவர்களாக இருந்தனர். தன்னுணர்வு அற்ற சமயங்களில் தான் தனித்து தொழும் இயல்பினராக இருந்தனர். மிகுந்த இறையச்சமுடைய இவர்கள் முன் எவராவது **அல்லாஹ்** என்று இயம்பி விட்டால் இவர்கள் உடலும் உள்ளமும் அதிர்ந்தவர்களாக ஜல்ல ஜலாலஹு (இறைவன் மகத்துவமாகி விட்டான்) என்றுக் கூறுவார். **முஹம்மது** என்று கூறிவிட்டாலோ அடுத்த

கணமே அலறித் துடித்தவர்களாக **அல்லாஹும்ம ஸல்லி வ ஸல்லிம் அலா முஹம்மதின் வ ஆலிஹி** என்று மொழிவார். பெறற்கரிய பெரும் பேறு பெற்ற இந்நல்லார் வல்ல நாயனின் படைப்பினங்களின் பரிபாஷையை அறிந்திருந்தார்கள்.

காயல்பட்டிணம், கோயம்புத்தூர், தொண்டி, கிழக்கரை, நம்புதாளை, இராமநாதபுரம், சுந்தரபாண்டிய பட்டணம், முத்துப்பேட்டை, ஏர்வாடி, இலங்கை என பல ஊர்களுக்கும் பல்லாக்கு வலியுல்லாஹ் அவர்களை மக்கள் மிக மரியாதையுடன் அழைத்துச் சென்று மார்க்க சொற்பொழிவுகளைக் கேட்பதும் தம் இன்னல்கள் நீங்கவும், மக்கட் செல்வமும், பொருட் செல்வமும் கிடைக்க பிரார்த்திக் குமாறும், கொள்ளை நோய்களும், தொற்று நோய்களும், பலாய்களும் நீங்க அல்லாஹ்விடம் இறைஞ்சுமாறும் வேண்டிக்கொள்வர். ஜாதி, மத, இன, மொழி பாகுபாடு இன்றி எண்ணற்ற மக்கள் இன்றும் பலன்களை பெற்றுச் செல்கின்றனர்.

## இவ்வுலகைத் துறத்தல்...

தொன்னூற்றி இரண்டு வயது வரை வாழ்ந்த பல்லாக்கு வலியுல்லாஹ் அவர்கள் ஹிஜ்ரி 1360ல் இவ்வுலகை துறக்கும் நான்கு நாட்களுக்கு முன்பே "இன்னாலில்லாஹி...! பல்லாக்கு தம்பி மறையவல்லவோ போகிறார்! பல ஊர்களில் இருந்தும் ஏராளமான மக்கள் வருவார்களே!" என்றும், "இறைவா எம்மை இறை நம்பிக்கையுடன் இறக்கச் செய்வாயாக!" என்றும் இறைஞ்சிய வண்ணம் இருந்தார். துல் காயிதா பிறை 25 வெள்ளிக்கிழமை காலை அழியும் இவ்வுலகைத் துறந்தார்.

இவர்களுடைய அடக்கவிடம் கீர்த்தி மிகு கீழக்கரையில் புதுப்பள்ளிவாயிலை அடுத்த தென்னந்தோட்டத்தில் உள்ளது. அங்கேயே இவர்களது மகன் சையது முஹம்மது சாஹிப் அவர்களது அடக்கவிடமும் பேரர் ஷாஹுல் ஹமீது அவர்களின் அடக்கவிடமும் அமைந்துள்ளது.

**தொகுப்பு : மஹ்பூப் ஜான் சையத் முபாரக்**

# அற்புதம் விளைத்திடும் ஆறு நோன்புகள்...!

**ஆக்கம் : இப்னு ஸாலிஹ்**

## ஷவ்வாலின் தலைப்பிறை :

அருட்பொக்கிஷமாக அல்லாஹ் நமக்கு அருளிய புனித ரமலான் மாதத்தினை அடுத்து ஷவ்வால் மாதம் நம்மை எதிர் கொண்டழைக்கிறது!

ஷவ்வாலின் தலைப்பிறையானது இஸ்லாமியர்களுக்கு தனிப்பெரும் முக்கியத் துவம் வாய்ந்ததொரு நன்னாள்! மாதமொன்று நிறைவாக, அல்லாஹ்விற்காக ஆசைகளையும், ஆகாரங்களையும் கட்டுப்படுத்தி மன அரக்கனோடு மாபெரும் போரோன்று நிகழ்த்தியதன் வெற்றித் திருநாள்!

போர் ஒன்றிலிருந்து திரும்பி வந்த அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் "இது சிறிய போர் பெரும்போர் ஒன்றுக்காக இனி ஆயத்தமாகிட வேண்டும்" என்று கூறிய போது ஆச்சரியத்தால் அகல மலர்ந்தன அண்ணலாரின் அன்புத் தோழர்கள் தம் கண்கள்!

புன்னகைப் பூத்த அந்த புனித மகனார் மன இச்சைகளுடன் நடத்திடும் போராட்டம் என்று விரித்துரைத்து அதனை ஜிஹாதுல் அக்பர் - பெரும் போராக சுட்டிக்காட்டினார்கள். அந்த விளக்கத் திற்கொப்ப, மன ஆர்ப்பாட்டங்களுக்கு விலங்கிட்டு மகத்தான வெற்றி கொண்டதற் கான பரிசுப் பெருநாள் தான் ஷவ்வாலின் தலைப்பிறை தரும் ஈதுல் பிதர்!

மனோ இச்சைகளெனும் சோதனை களை நாம் சாதனைகளாக்கி, வெற்றி பெற்றிருக்கிறோம்! இந்த வெற்றித் திருநாளில் உண்ணாமை, பருகாமை முதலியனவற்றை அல்லாஹ் நமக்கு ஹராமாக்கி இருக்கிறான்.

இந்த மாபெரும் மகிழ்ச்சிக்குப் பின்னர் ஒரு சின்ன சோதனை காத்திருக்கிறது! ஆம் ஆறே ஆறு தினங்களுக்கு மட்டுமே முந்திய உணர்வு, உணவுக் கட்டுப்பாடு!

பெருநாளை அடுத்த தொடர்ந்த ஆறு தினங்களிலும் நோன்பு நோற்பது சுன்னத்! இந்த சுன்னத்தான நோன்புகள் ஈட்டித் தருகின்ற நன்மைகளைப் பற்றியும், அதன் சிறப்புகளைப் பற்றியும் பல்வேறு நபிமொழிகள் இருக்கின்றன!

யார் ஒரு நன்மையான காரியத்தைச் செய்கின்றாரோ அவருக்கு பத்து நன்மைக் கான கூலிகள் வழங்கப்படும் எனறு இறைமறை குர்ஆன் கூறுகிறது!

ரமலானை அடுத்த ஷவ்வால் மாதத்தில் தொடர்ந்து ஆறு தினங்கள் நோன்பு நோற்றால் வருடமுழுதும் நோன்பு நோற்றவரைப் போலாவார்! என்றொரு நபிமொழி கூறுகிறது.

## பெரியோர்களின் விளக்கம் :

இவை இரண்டையும் இணைத்து பெரியார்கள் ஒரு அருமையான விளக்கத் தை நமக்குச் சொல்லித் தருகிறார்கள். ரமலானின் நோன்பு *30* தினங்களும், ஒவ்வொன்றுக்கும், பத்து நன்மைகள் வீதம் முன்னூறும், தொடர்ந்த ஷவ்வாலின் ஆறு நோன்புகளுக்கும் அறுபது நன்மைகளுமாக *360* நன்மைகள் கிடைக்கப்பெறுகின்றன. இதுவே அண்ணலார் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் குறிப்பிட் டுக் காட்டுகின்ற வருடம் முழுதும் நோன்பு வைத்ததைப் போல என்பதன் கருத்தாகும்.

ஆனால் சிலர் ரமலானைத் தொடர்ந்து உடனேயே இப்படி நோன்பு நோற்பது சரி அல்ல! ஏனென்றால் யூதகிறித்தவர்கள் தங்களுக்கு இறைவ னால் இடப்பட்ட கட்டளைகளின் அளவை விட அதிகப்படியாகவே எப்போதும் செய்வர்! நாமும் இப்படி நோன்பு வைக்கிறபோது அவர்களோடு நாமும் ஒப்பாகி விடுகின்றோம் என்கிறனர்.

அறிவு சான்ற பெரியோர்களான இமாம்கள், இவர்களின் இந்த கூற்றுக்கு அறிவுப்பூர்வமான அழகான விடையைத் தருகின்றனர்.

ரமலான் மாதத்து நோன்பானது கடமை (பர்ளு)யைச் சார்ந்தது. ஆனால் ஷவ்வாலின் நோன்பானது சுன்னத். அது மட்டுமல்லாது, ரமலான் ஷவ்வாலு டைய நோன்புகளுக்கு மத்தியில் ஈதுல் பித்ர் - ஈகைப் பெருநாள் பிரித்தும் விடுகின்றது. ஆகவே நமது செயல் அவர்களோடு சற்றும் ஒப்பாகாது.

மொத்தத்தில் ஷவ்வாலின் ஆறு நோன்புகளுக்கு மிகப்பெரும் நன்மைகள் கிடைக்கப்பெறும் என்பதும் உறுதியாகத் தெளிவாகுகிறது.

ஒரு நபிமொழி ஈண்டு கவனித்தற்பாலது, வானங்களையும் பூமியையும் அல்லாஹ்! ஷவ்வால் மாதத்தின் ஆறுதினங்களில் படைத்தான். எனவே யார் இந்த ஆறு தினங்களிலும் நோன்பு நோற்கின்றாரோ அவருக்கு எண்ணத்தொலையா நன்மைகளை அல்லாஹ் வழங்குவதோடு, அவரது பாவங்களை அழித்தொழிக்கிறான். அவரது அந்தஸ்த்துகளை உயர்த்து கின்றான். இதற்கு இசைவான நிகழ்ச்சி ஒன்றினையும் இங்கே நினைவு கூறலாம்.

## ஹஜ்ரத் சுப்யானுஸ் ஸௌவ்ரீ அவர்களும் ஆறு நோன்புகளும் :

ஸுப்யானுஸ் ஸௌவ்ரீ ரஹிமஹு முல்லாஹ் சொல்கிறார்கள். நான் மக்கா முகர் ரமாவில் ஆண்டுகள் மூன்றாகத் தங்கியிருந்தேன்! அப்போது அவ்வூரைச் சார்ந்த நல்லார் ஒருவர், தினந்தோறும் மதியவேளையில் வந்து கஃபாவை தவாஃப் செய்வார்! பின்னர் அங்கேயே தொழுவார். திரும்பிச் செல்கின்ற வேலையில் எனக்கு ஸலாமும் சொல்வார்.

அன்றாடம் நடக்கின்ற நிகழ்ச்சி களால் நாங்கள் நண்பர்களானோம். இதற்கிடையில் ஒரு நாள் அவர் நோய் வாய்பட்டார். அப்பொழுது என்னை அழைத்து "நண்பரே! நான் மரணித்து விட்டால் தாங்களே என்னைக் குளிப்பாட்ட வேண்டும், தொழ வைத்து அடக்கமும் செய்திட வேண்டும். பின்னர் அன்றிரவு எனது கபரருகே தாங்களிருந்து முன்கர் - நகீர் எனும் அமரர்கள் என்னிடம் கேள்விகள் கேட்கும் போது சொல்லித் தர வேண்டும்!" என்று கேட்டுக் கொண்டார்.

அவர் அந்நோயிலேயே மௌத்தாகி விட்டார். அவரது வேண்டுகோளின்படியே எல்லா வற்றையும் நிறைவேற்றிய நான் அன்றிரவு அவரது கபரருகே கண்ணயர்ந்தேன்.

தூக்கத்திற்கும், விழிப்பிற்கும் இடைப்பட்ட ஒரு நிலையில் என்னையே நான் மறந்திருந்த வேலையில், திடீரென "ஸுப்யான் தாங்கள் திரும்பிச் செல்லலாம்" என்றொரு குரல் கேட்டது. ஏன்? என்றேன்.

"ரமலான் முழுவதும் கடமையான நோன்பை நிறைவேற்றுவதோடு தொடர்ந்து ஷவ்வால் பிறையிலும் அவர் ஆறு நோன்புகள் வைப்பதுண்டு! அதுவே அவருக்குப் போதும்! முன்கர் நகீர் கேள்வி

கணக்கு தேவையில்லை" என்ற பதில் கிடைத்தது.

இதனால் திடுக்கிட்டு உணர்வு பெற்று எழுந்த நான் சுற்றும் முற்றும் பார்த்தேன் யாரையும் காணவில்லை. எனவே ஒலுச் செய்து தொழுதேன். மீண்டும் தூங்கி விட்டேன். அப்போது முன்பு கேட்டதைப் போல மும்முறை சொல்ல கேட்ட போது, அது நிச்சயமாக இறைவன் புறத்திலிருந்து அறிவிக்கப்பட்டது தான் என்று உறுதி செய்துக் கொண்டு அவ்விடத்தை விட்டு எனக்குள்ளே இப்படி பிராத்தித்தவனாக அகன்றேன்.

"இறைவா! ரமலானின் நோன்பு வைப்பதற்கும், அதைத் தொடர்ந்து ஷவ்வாலின் 6 நாட்களிலும் நோன்பு வைப்பதற்கும் தௌஃபீக் செய்வாயாக!"

அதன்படியே அடுத்த ஆண்டு எனக்கும் இறைவன் அவ்வாறு நோன்பு வைப்பதற்கான பாக்கியத்தை அருளினான்.

நாம் ஒவ்வொருவரும் இந்த துஆவைச் செய்வோம். அதன்படியே அமலும் செய்வோமாக! **(நன்றி : ஹுஜ்ஜத் மாத சஞ்சிகை, செப்டம்பர் & அக்டோபர் 1981)**

# அவுலியாக்களின் நோன்புகள்...!

## சவ்மே தாயிம்...

பலர் அவுலியாக்களைப் பற்றி தவறான கருத்துக்கள் கொண்டுள்ளனர். குறிப்பாக இந்த வஹ்ஹாபிகள் காலத்தில் அது சற்றே கூடுதலாக காணப்படுகிறது. அதாவது அவுலியாக்கள் ஷரீஅத் சட்ட கோட்பாட்டுக்கு கட்டுப்படாமல், ஆன்மிகம், தசவுஃப், ஸுலூக், தரீகத் என்று ஏதாவது ஒரு வழியில் செல்கிறார்கள் என்று பொய் பிரச்சாரம் செய்கின்றனர் இந்த வஹ்ஹாபிகள். பாவம் பொது மக்கள் இவர்களின் குழப்பத்தில் ஆட்பட்டு இப்படி இருக்குமோ அப்படி இருக்குமோ என்று தெரியாத் தனமாகவும், மேலோட்டமாகவும், அறியாமையில் அகப்பட்டுக் கொள்கிறார்கள்.

ஆனால் உண்மை என்ன என்று ஆழ்ந்து பரிசீலிப்போமானால் வலிமார்களைப் போன்று அவர்கள் வாழ்நாளில் ஷரீஅத்துக்கு கட்டுப்பட்டு வாழ்ந்தவர்கள் உலகில் யாரும் இலர் என்ற திடமான முடிவுக்கு வரலாம். உதாரணமாக ஷரீஅத் கடமைகளில் ஒன்றான நோன்பை எக்காரணம் கொண்டும் விட்டதே இல்லை. மாறாக ஷரீஅத் கூறும் கடமையான ரமலான் நோன்பு மட்டுமல்ல சுன்னத்தான, நஃபிலான அத்தனை நோன்புகளையும் வாழ்நாள் முழுக்க பேணுதலாகவே ஆயுள் நோன்புகள் என்னும் சவ்மே தாயிம் இருந்து வந்துள்ளனர். ஷரீஅத் கூறும் நோன்பு வைக்க ஹராம் ஆக்கப்பட்ட இரு பெருநாட்கள், மற்றும் அய்யாமுத் தஷ்ரீக் மூன்று நாட்கள் ஆக வருடத்தில் அந்த ஐந்து நாட்களும் ஷரீஅத்துக்கு கட்டுப்பட்டு ஆகாரத்தை வெறும் நாக்கில் ருசித்து அடையாள நோன்பு முறிப்பு மேற்கொண்டுள்ளனர். இதற்கு பற்பல சம்பவங்களை ஆதாரப் பூர்வமாக வலிமார்களின் வரலாறுகளில் இருந்து எடுத்துக் காட்ட முடியும், சிலவற்றை மட்டும் எடுத்து எழுதுகிறோம்.

## பகல் முழுக்க தண்ணீர் அருந்தாமை...

தமிழகத்து பாதுஷாவாம் நாகூர் நாயகத்தின் குருநாதர் பரம்பரையில் மேல் வரிசை கிரமமாக 6வது தலைமுறையில் வரும் உலக சூஃபியாக்களில் மேலானவராக போற்றப்படும் ஹஜ்ரத் ஃபரீதுத்தீன் அத்தார் ஹிஜ்ரி ஐந்தாம் நூற்றாண்டில் தாம் எழுதிய "தஜ்கிரத்துல் அவுலியா" என்ற கிரந்தத்தில் அது போது வாழ்ந்த புகழ் பெற்ற சூஃபியாக்களில் ஒருவரான ஹஜ்ரத் அபூ முஹம்மத் ரூயேம் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களைப் பற்றி அவரே கூறுவதை இவ்வாறு குறிப்பிடுகிறார்...

இருபது ஆண்டுகள் என் வாழ்நாளில் பசிக்கும் போது நான் எவ்வகை உணவை சாப்பிட வேண்டும் என்று நினைப்பேனோ அவ்வகை உணவு என்முன் உடன் கிடைத்துவிடும், நான் சீண்டினேனில்லை. ஒரு முறை எனக்கு மிக அதிகமாக தாகம் எடுத்தது. ஒரு வீட்டை அணுகி கதவை தட்டி நான் தண்ணீர் கேட்டேன். உள்ளிருந்த ஓர் இளைஞர் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தார். நான் குடித்து முடிக்கும் வரை நின்றிருந்த அவ்விளைஞர் நீர் எப்படிப்பட்ட சூஃபியாய் இருக்கிறீர்? பகலில் தண்ணீர் அருந்துகிரீரே! என்று கூறிவிட்டு கதவை முடிவிட்டு உள்ளே சென்று விட்டார். அன்றிலிருந்து இந்த தள்ளாத வயது இன்று வரை நான் என்றும் தண்ணீர் அருந்தியதே இல்லை. என்றார்.

**ஆதாரம் : தஜ்கிரத்துல் அவுலியா பக் : 27**

## அதிசய நோன்புகள்...

ஹஜ்ரி 424களில் வாழ்ந்த சூஃபி நாதாக்களின் பெருமதிப்பைப் பெற்ற மஹான் ஹஜ்ரத் அபுல் ஹஸன் கிர்கானி அவர்களைப் பற்றி அதே நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்.

சூஃபியாக்கள் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு கராமத் காட்டும் சக்தியை பெற விளைவோர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமெனில்... ஒரு நாள் உணவுண்டு மூன்று நாட்கள் ஒன்றுமே சாப்பிடாமல் இருக்க வேண்டும். பின் ஒரு வேளை சாப்பிட்டு 14 நாட்கள் உண்ணாமல் பருகாமல் தொடர் நோன்பு இருக்க வேண்டும். பின் ஒரு வேளை உண்டு நான்கு மாதங்கள் ஒன்றுமே உண்ணாமல் இருக்க வேண்டும். பின் ஒரு நாள் உண்டு வருடம் முழுக்க உண்ணாமல் வாழ வேண்டும். இதை நான் தொடர்ந்து கடைபிடித்த போது ஏதோ தணியானதோர் பொருளை என் வாயில் ஊறுவதைப் போல் உணர்ந்தேன். அது பாம்பாக இருக்குமோ என எனக்கு சந்தேகம் ஏற்பட்டு துஆ கேட்கலானேன்.

"யா அல்லாஹ்! எனக்கு எத்தொடர்புமின்றி நீயே அருள்வாயாக!" என வேண்டினேன். பிறகு என் இறைப்பையில் ஷீரினியின் இனிப்பையும், கஸ்தூரியை விட மேலான மணமும், தேனைவிட தித்திப்பும் கிடைப்பப்பெறலானேன். தண்ணீர் தாகம் எடுப்பது போன்று எனக்கு உணர்வு ஏற்படும் போது என் தாகத்தை போக்குவது போல் குளிர்ந்த நீரூற்று என் குடலில் ஊர்வது போல் நிலை உண்டாகி என் தாகம் தீர்ந்து விடும் என்றார்கள்.

## அதி அற்புத ரமலான் முதல் நோன்பு...

மேற்கண்ட சம்பவங்களைவிட இன்னும் ஆச்சரியப்படத் தக்க சம்பவத்தை நோக்குங்கள். உலகத்து அவுலியாக்களின் தலைமை பீடமாம், விலாயத் வேந்தர், தவராஜ ராஜ மகாராஜர், மெய்நிலைக் கொண்ட ஞானி வள்ளல் கவுதுஸ் சமதானி அவர்களின் திருப்புனித வீட்டில் அதிகாலை வேளை ஃபஜர் தொழுகைக்குக்குப் பின் பலர் கூடி மேன்மைமிகு முஹ்யித்தீன் ஆண்டகையின் வீட்டில் கூடி இன்று ரமலான் நோன்புதானா? நேற்று பிறை தெரிந்த செய்தி எட்டவில்லையே! தாங்கள் கூறின் ரமலானின் நோன்புக்கான நிய்யத்தை நாங்கள் வைத்துக் கொள்கிறோம் என்றனர். அதைக் கேட்ட ஹஜ்ரத் அவர்கள் நானும் சந்தேகத்தின்பேரில் உள்ளேன் என்று கூறிக்கொடிருந்த போதே பணிப் பெண் மரியாதையோடு வந்து நின்று இன்று ரமலான் முதல் நோன்பு என்று அறிவித்து விடும்படி பீஅம்மா கூறினார்கள் என்றாள்.

உள்ளே எழுந்து சென்று தம் மகளாரிடம் எந்த தலீலுடன் இன்று ரமலான் முதல் நோன்பு என அறிவிப்பது என்று கேட்ட போது...

இன்று சஹர் வேளைக்கு பிறந்த இந்த குழந்தை பால் அருந்தாமல் நோன்புள்ளது அதுவே மாபெரும் தலீலாகும் என்றனர்.

ஆம் அன்று மட்டுமல்ல ஹிஜ்ரி ஆண்டின் முழு ரமலான் மாதமும் அக்குழந்தை நோன்பிருந்த வரலாறு பதியப்பட்டுள்ளது.

## ஷரீஅத் சட்டம்...

சுன்னத் வல் ஜமாஅத் சட்டமாமேதைகளான நான்கு இமாம்களிடத்திலும், குழந்தைகள் மீது நோன்பு கடமையே யில்லை. என்றாலும், பிறந்த நொடியிலிருந்தே ஷரீஅத்துக்கு கட்டுப்பட்டு அதிசய நோன்பு வைத்த தீன்தீன் முஹ்யித்தீன் பெருமான் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

சாதாரணமான எடுத்துக்காட்டுகளாக வலிமார்கள் வைத்த நோன்புகளை குறித்துள்ளோம். வலிமார்கள் என்போர் நோன்பு மட்டுமல்ல ஷரீஅத்தின் அத்தனை அமல்களிலும் பரிபூரணமாக நடந்து வந்தவர்கள் தான் என்பதை யாராலும் மறுக்க முடியாது மறுப்போர் மூளைக் கோளாறு உள்ளோர்.

இப்புனித ரமலான் மாதத்தில் அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அப்புனித நாதாக்களின் பரக்கத்தால் எல்லா விதமான நமது நல் அமல்களை ஏற்க நாயன் ஏற்றுக் கொள்வானாக என்று துஆ செய்வோமாக.

# ஈடேற்றம் பெற (இறை சன்னிதியில்) பிரார்த்தனை

یارب بحق سید کونین مصطفٰی

**யாரப் பஹக்கே சையதே கவ்னைனே முஸ்தபா,**

ஓ, எங்களை பரிபாளிப்பவனே! இருலோகத்திலும் உன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரான (ரஸுலுல்லாஹ்) முஸ்தபாவின் பெருட்டால்,

آں شافع معاصی و آں منبع سخا

**ஆ(ன்) ஷாஃபியே மஆஸியோ ஆ(ன்) மம்பயே சஃகா.**

அவர்களே எங்கள் பாவத்திற்கு மன்னிப்பு தேடித்தருபவராகவும், கொடைகளின் ஊற்றாகவும், உள்ளார். (அவரின் பொருட்டால் மன்றாடுகிறோம்)

یارب بحق شاہ نجف آنکہ آمدہ

**யாரப் பஹக்கே ஷாஹே நஜஃப் ஆ(ன்)கே ஆமதாஹ்,**

ஓ, எங்களை பரிபாளிப்பவனே! நஜஃப் தேசத்து அரசராய் இறக்கப்பட்டவராலும், (ஹஜ்ரத் அலீ)

درشان او تبارک و یسین و ھل اتی

**தர்ஷானேஊ தபாரகோ யாஸீனோ ஹல் அதா.**

(திருமறையில்) யாரைப்புகழ்ந்து தபாரக், யாஸீன், வாரி வழங்குவேன் என்று கூறினாயோ (அவர்களின் பொருட்டால் மன்றாடுகிறோம்)

یارب بہ آہ و نالہ و افغان فاطمہ

**யாரப் பஆஹ்வ நாலவோ உஃப்கானே பாத்திமா,**

ஓ, பரிபாளிப்பவனே! அழுது அழுது முறையீடு செய்யும், கண்ணீரின் ஓங்காரம் செய்யும் அன்னை பாத்திமாவின் பொருட்டால்,

یارب بسوز سینۂ آں سید النساء

**யாரப் பசோஸே சீனயேஆ(ன்) சையதுன் நிஸா.**

பெண்மணிகளுக்கெல்லாம் தலைவியானவரின் சுவண்டு போய் சல்லடையான (இருதயத்தின்) பொருட்டால்.(எங்களை இரட்சிப்பாக!)

یارب بحرمت دل صد پارۂ حسن

**யாரப் ப ஹுர்மதே திலே சத்பாரயே ஹஸன்,**

ஓ, எங்களை பரிபாளிப்பவனே! நூறு துண்டுகளாகிப் போன இமாம் ஹஸன் அவர்களின் சங்கைப்பொருந்திய இருதயத்தின் பொருட்டால் (இமாம் அவர்களுக்கு விஷம் கொடுக்கப்பட்டதால் அவர்களின் இருதயம் வெடித்து இரத்தக் கட்டிகளாக வந்து ஷஹீதான வரலாறு)

آں نقد شاہ جملۂ آفاق مرتضٰے

**ஆ(ன்) நக்தே ஷாஹே ஜும்லயே ஆஃபாகே முர்தஜா.**

என்றும் (இமாம் அலியாரின் ) உயர்ந்த வாரிசு இளவரசராய் திகழ்ந்த (இமாம்) ஹஸன் அவர்களின் பொருட்டால் மன்றாடுகிறோம்!

یارب بحرمت جگر تشنۂ حسین

**யா ரப் ப ஹுர்மதே ஜிகர் திஷ்னயே ஹஸன்,**

ஓ எங்களை பரிபாளிப்பவனே! (நாவரண்ட) தாகத்தின் உச்சியிலும் (சொட்டு நீர்) காணா இமாம் ஹுஸைனாரின ஈரக் குலையின் பொருட்டாலும்,

یارب بحق خون شہیدان کربلا

**யா ரப் ப ஹக்கே கூன் ஷஹிதானே கர்பலா!**

எங்களைப் பரிபாளிப்பவனே! கர்பலா களத்திலே சிந்தப்பட்ட இரத்தத்தின் பொருட்டால் மன்றாடுகிறோம்!

یارب بحق عابد و باقر امام دین

**யா ரப் ப ஹக்கே ஆபிதோ பாகர் இமாமே தீன்,**

ஓ, எங்களை பரிபாளிப்பவனே! (அஹ்லே பைத் இமாம்களான) (இமாம் ஜைனுல்) ஆபிதீன், இமாம் பாகர் ஆகியோரான மார்க்க அறிஞர்களின் பொருட்டால்,

یارب بحق جعفر و موسی رہنما

**யா ரப் ப ஹக்கே ஜாஃபரோ மூஸாயே ரஹ்னுமா!**

ஓ, எங்களை பரிபாளிப்பவனே! வழிகாட்டிகளான இமாம் ஜாஃபர் சாதிக், இமாம் மூஸா ரஜா ஆகியோரின் பொருட்டால் மன்றாடுகிறோம்!

یارب بحق شاہ غریب و غریب دوست

**யா ரப் ப ஹக்கே ஷாஹே கரீபோ கரீப் தோஸ்த்,**

ஓ, எங்களை பரிபாளிப்பவனே! ஏழை எளியோரின் உளம் நிறைந்த வேந்தரான,

یعنی امام و سرور و سلطان دین رضا

**யானீ இமாமோ சர்வரோ சுல்தானே தீன் ரிஜா!**

அதாவது இமாம், அதிபதி, அரசர் என பட்டங்கள் பல பெற்ற இமாம் ரிஜா அவர்களின் பொருட்டால் மன்றாடுகிறோம்!

یارب بحرمت تقی و عزت نقی

**யா ரப் ப ஹுர்மதே தகியே இஜ்ஜதே நஃகீ,**

ஓ, எங்களை பரிபாளிப்பவனே! இமாம் தகீ அவர்களின் மாட்சிமையின், இமாம் நஃகீ அவர்களின் கண்ணியத்தின் பொருட்டால்,

یارب بحق عسکری آں شاہ و پیشوا

**யா ரப் ப ஹக்கே அஸ்கரி ஆ(ன்) ஷாஹே பேஷ்வா!**

ஓ, எங்களை பரிபாளிப்பவனே! வழிகாட்டிகளுக் கெல்லாம் மன்னராய் திகழும் இமாம் அஸ்கரி அவர்களின் பொருட்டால் மன்றாடுகிறோம்!

یارب بحق مہدی ہادی کہ ذات اوست

**யா ரப் ப ஹக்கே மஹ்தியே ஹாதி கே ஜாதே ஊஸ்த்,**

ஓ, எங்களை பரிபாளிப்பவனே! பிற்காலத்தில் வரவிருக்கும் மஹ்தி என்னும் அந்த மேன்மை மிக்கவரின் பொருட்டால்,

مانند مصطفائے معلائے مجتبیٰ

**மானிந்தே முஸ்தபாயே முஅல்லாயே முஜ்தபா!**

முன்பே தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட அந்த இமாம் மஹ்தி அவர்களின் பொருட்டால் மன்றாடுகிறோம்!

یارب بحق آل محمد کہ در ازل

**யா ரப் ப ஹக்கே ஆலே முஹம்மத் கே தர் அஜல்,**

ஓ, எங்களை பரிபாளிப்பவனே! ஆதியிலேயே முஹம்மத் நபியின் கிளையார்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டு,

دلہا ز مہر شاں شدہ جام جہاں نما

**தில்ஹா ஜ முஹர்ஷான் ஷுதா ஜாமே ஜஹான் நுமா!**

அவர்களது உள்ளங்கள் மேன்மை மிகு ஞான ஸ்தானத்தில் நிலைப்படுத்தப்பட்டு , உலகம் முழுக்க வழிகாட்டியாய் திகழ்ந்தனவோ அவர்களின் பொருட்டால் மன்றாடுகிறோம்!

دارم امید آنکہ در آئی ز روئے لطف روزے کہ میشوند مساوی شہ و گدا

**தாரம் உம்மீத் ஆங்கே தர் ஆயே ஜ ரூயே லுத்ஃப்,**

**ரோஜே கே மீ ஷவன்ந் மஸாவீ ஷஹ்ஒ கதா!**

அரசனும், ஆண்டியும் ஒன்றாய் நிறுத்தப்படும் அந்த (கியாம) நாளிலே, அஹ்லே பைத்தின் கருணை கடாச்சத்தால் எனக்கு கிடைக்கும் என்ற திடமான நம்பிக்கை கொண்டுள்ளேன்!

از لطف سوئے جامی مسکیں نظر فگن بخشی مرا بہ شاہ شہیدان کربلا

**அஜ் லுத்ஃபே சூயே ஜாமீ மிஸ்கீன் நஜர் ஃபுகன்,**

**பக்ஷே முரா ப ஷாஹே ஷஹீதானே கர்பலா!**

யா அல்லாஹ்! கர்பலா களம் கண்டு ஷஹீதான (உயிர் தியாகம் செய்த) வர்களின் பொருட்டால், இந்த அற்ப மான ஜாமியையும், உன் கருணைப் பார்வையால் மன்னித்து அருளவாயாக!

برائے ایصال ثواب ؛ غلام غلاماں آل محمد ﷺ مرحوم الحاج سید افتخار علی کاظمی چشتی خادم حضرت خواجہ غریب نواز، مدینہ ہاؤس، درگاہ شریف، اجمیر اقدس۔

ஈஸாலே ஸவாபிற்காக :

**அஹ்லே பைத்து சையதுமார்களின் அடிமைகளின் அடிமையான மர்ஹும் அல்ஹாஜ் சையத் இஃப்திகார் அலி காஜிமி சிஷ்த்தி காதிம் ஹஜ்ரத் காஜா கரீப் நவாஸ், மதீனா ஹவுஸ், தர்கா ஷரீஃப் - அஜ்மீர்**

# பெருமானார் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பெற்றோர்கள் தூய முஃமின்களே...!

ஆக்கம் : அப்ஜலுல் உலமா குளம் ஜமால் முஹம்மது சூஃபி -காயல் பதி

**பிறப்பிற்கு முன்னரே நபித்துவம் பெற்ற மாநபி நம் கண்மணி நாயகம்:**

1. எனது பாட்டனார் இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் பிரார்த்தனை.

2. ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள என்னைப் பற்றி வழங்கிய நற்செய்தி.

3. எனது தாயார் கண்ட கனவு ஆகியவற்றின் வெளிப்பாடாக நானுள்ளேன்.

இறைத்தூதர் அவர்களை ஈன்றெடுத்த சமயம் அவர்களின் தாயார் ஒரு பேரொளியைப் பார்த்தார்கள். அதன் மூலம் சிரியா நாட்டு கோட்டைகளெல்லாம் பிரகாசித்தன.

மற்ற நபிமார்களை ஈன்றெடுக்கும் போது அவர்களின் தாய்மார்களும் இவ்வாறே பார்த்தார்கள்.

**அறிவிப்பாளர் :** ஹஜ்ரத் இர்பாழ் இப்னு சாரியா ரலியல்லாஹு அன்ஹு

**நூற்கள் :** அஹ்மத், ஹாகிம், தப்ரானி (கபீர்) பைஹகீ (தலாயில் நுபுவ்வா)

இதே அற்புதங்கள் அனைத்து நபிமார்களின் தாயாருக்கும் நிகழ்ந்தன. இதைத் திருக்குர்ஆன் தெளிவாக விளக்குகிறது. ஸூரா மாயிதா வசனம் 75 நபி ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் தாயார் பற்றியும் ஸூரா ஹூது வசனம் 73 நபி இஸ்ஹாக் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் தாய் பற்றியும் ஸூரா அல் கஸஸ் வசனம் 7 மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் தாயார் பற்றியும், ஸூரா இப்ராஹீம் வசனம் 41 நபி இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் தாயார் பற்றியும், ஸூரா நூஹ் வசனம் 28 நூஹ் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் தாய் பற்றியும் அவர்கள் நல்லடியார்கள் என்று மிகத் தெளிவாக விளக்குகிறது.

இவ்வாறு இறைவனின் நல்லடியாராகவும், இறைநேசச் செல்வியாகவும் வாழ்ந்த உத்தமியான அன்னை ஆமினா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் எவ்வாறு நரகவாதியாக ஆக முடியும்? அவர்கள் எவ்வித கேள்வியுமின்றி சுவர்க்கவாசியாக சுவர்க்கத்தில் பிரவேசிப்பார்கள்.

இதைப் பற்றி இறைத் தூதர் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் குறிப்பிடுகையில் மறுமை நாளில் மகாமே மஹ்மூத் எனும் புகழுக்குரிய இடத்தில் நானிருக்கும் போது என் தாய் தந்தைக்காக என்னிறைவனிடம் நான் கேட்பேன். (நான் கேட்டதை) அவன் எனக்கு வழங்குவான்.

**அறிவிப்பாளர் :** ஹஜ்ரத் இப்னு மஸ்வூத் ரலியல்லாஹு அன்ஹு.

**நூல் :** ஹஜ்ரத் ஹாகிம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் **முஸ்தரக்** என்ற கிரந்தம்.

இதற்கு நமது பெரியோர்கள், தன் தாய், தந்தைக்காக கேட்பேன் என்று நபிகளார் கூறியது, அவர்களை சுவர்க்கத்தில் தம்முடன் உயர்ந்த சுவர்க்கத்தில் இருக்கச் செய்யவே அன்றி வேறில்லை என்று விளக்கமளித்து இருக்கிறார்கள்.

மேலும் எனது ரப்பிடம் என் குடும்பத்தில் எவரையும் நரகில் நுழைப்பிக்கக் கூடாது என்று கேட்டேன். அதனை அவன் ஏற்றுக் கொண்டான் என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறியதாக ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் இந்த ஹதீஸ் இமாம் இப்னு ஜரீர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் தப்ஸீரில் காணக் கிடைக்கிறது.

இதே ஹதீஸை ஹஜ்ரத் இம்ரான் இப்னு ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்க, அல்லாமா அபூ ஸயீத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தன் ரஹுன் நுபுவ்வா எனும் நூலிலும் பதிவு செய்துள்ளார்கள்.

இமாம் புகாரி நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் புகாரி எனும் கிரந்தத்தில், நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பிறந்த செய்தியைக் கேள்விபட்ட சந்தோஷத்தில் அவர்களது பெரிய தந்தையான அபூலஹப் தன் சுட்டுவிரலைக் காட்டி ஒரு அடிமையை விடுதலை செய்ததால் அவன் நரகில் கடும் வேதனை படும் போது கூட, திங்கட்கிழமை தோறும் அபூ லஹ்பிற்கு அவன் சுட்டிக்காட்டிய விரலிலிருந்து அமுதமான பால் சுரந்து அதன் மூலம் அவன் தாகம் தீர்த்துக் கொள்கிறான் என்ற செய்தியை நபிகளார் சொல்லி இருக்கிறார்கள்.

ஆகவே ஒரு காபிருக்கு நபிகளாரின் மீலாதை கொண்டாடி யதற்காக நரகில் வேதனை குறைக்கப் படுகிறது என்றால், உத்தம திருநபியை பெற்றெடுத்த பெற்றோர்களை எங்ஙனம் நரகம் தீண்டும்? கொஞ்சமாவது சிந்திக்க வேண்டாமா?

ஆக, இந்த அறிவுக் குருடர்கள் தெரிவித்த முதல் ஆட்சேபனை எவ்வித முகாந்திரமும், ஆதாரமும் அற்றது என்று இதன் மூலம் தெள்ளத் தெளிவாக விளங்க வருகிறது.

**ஆட்சேபனை 2 :**

ஸுஜூது செய்பவர்களிலிருந்து புரட்டிக் கொண்டு வரப்பட்டதாக சொல்கிற நீங்கள், நபிகளாரின் வமிசாவழியின் முன்னோரான நபி இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் தந்தை ஆஜர் ஒரு சிலை வணக்கம் செய்பவராகவே இருந்தார் என்று குர்ஆன் ஹதீதுகள் மற்றும் வரலாறுகள் தெளிவாகக் கூறியிருக்கிறதே! இதைப் பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ?

**தெளிவான பதில் :**

முதலில் ஆஜர் என்பவர் யார்? என்று தெளிவாக விளங்க வேண்டும், **ஆஸர் என்பவர் நபி இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் தந்தை அல்ல. அவர்களின் பெரிய தந்தையே!** இது பற்றி குர்ஆனில் வந்துள்ள ஆயத்தில்...

இப்ராஹீம் தம் தந்தை ஆஜரிடம் சிலைகளை தெய்வமாக நீர் ஆக்கிக் கொண்டீரா? உம்மையும், உம்முடைய சமூகத்தினரையும் பகிரங்கமான வழிகேட்டில் இருப்பதை நிச்சயமாக நான் காண்கிறேன் என்று கூறிய நேரத்தை ( நினைவு கூறுவீராக )

**அல் குர்ஆன் 6 : 74**

இவ்வசனத்தில் **தந்தை** என்று கூறப்பட்டிருக்கும் சொல்லான **அபி** என்ற அரபி சொல்லிற்கு தந்தை என்ற அர்த்தம் இருப்பது போல் சிறிய தந்தை, பெரிய தந்தை, பாட்டனார் என்ற அர்த்தங்களும் அரபியில் உண்டு. எனவே இதில் கூறப்பட்டிருக்கும் ஆஜர் இப்ராஹீம் நபி அலைஹிஸ் ஸலாம் அவர்களின் பெரிய தந்தையையே குறிக்கும்.

அதேபோல் குர்ஆனில், இதே வார்த்தைக்கு தந்தை என்ற பொருளில்லாமல் மற்ற பொருளோடு வரும் ஆயத்துக்களும் உண்டு. உதாரணமாக...

(நபி) யஃகூபுக்கு மரணம் நெருக்கியபோது, தன் பிள்ளைகளிடம் எனக்குப் பின் எதை வணங்குவீர்கள்? எனக் கேட்டபோது, நீங்கள் சாட்சியாளர்களாக இருந்தீர்களா? (அப்பிள்ளைகள்) கூறினார்கள்: உங்கள் இறைவனும் உங்கள் தந்தையரான இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக் ஆகியோரின் இறைவனுமாகிய ஒரேயொரு இறைவனையே வணங்குவோம். மேலும் நாங்கள் அவனுக்கே (முற்றிலும்) வழிப்பட்ட முஸ்லிம்களாக இருப்போம் எனக் கூறினர். **அல் குர்ஆன் 2 : 133**

**நபிகளாரின் சிறப்புகள் தொடரும்...**

# عيد مبارك

# ஈதுப் பெருநாள் சட்டங்களும்...! மகிழ்ச்சிப் பரிமாற்றங்களும்...!

وَلِتُكْمِلُوا الْعِدَّةَ وَلِتُكَبِّرُوا اللَّهَ

வலி துக்மிலுல் இத்தத வலிதுகப் பிருல்லாஹ். **(அல் பகறா :185)**

(ரமலான்) நோன்பு நாட்கள் எண்ணிக்கை பூர்த்தியடைந்த பின் அல்லாஹ்வின் மேன்மையை புகழுங்கள் அவன்தான் உங்களை நேர்வழிப்படுத்தினான்.

فَصَلِّ لِرَبِّكَ وَانْحَرْ

ஃப ஸல்லிலி ரப்பிக வன்ஹர்.

**(அல் கவ்ஸர் : 2)**

உங்களை படைத்தவனை தொழுது கொள்ளுங்கள். இன்னும் அவன் பாதையில் தியாகம் செய்யுங்கள். மேற்கண்ட குர்ஆனின் வசனங்கள் இருபெருநாளைப் பற்றி சுருக்கமாக பேசுகின்றன.

அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்... "மதீனத்து வாசிகள் இரண்டு நாட்கள் மகிழ்ச்சி கொண்டாடினார்கள். அவர்களைப் பார்த்து பெருமானார் சொன்னார்கள் அதைவிட சிறந்த நாட்களான ஈதுள் வித்தர் நோன்பு பெருநாளையும், ஈதுல் அஜ்ஹா பக்ரீத் பெரு நாளையும் கொண்டாடுங்கள்" என்றார்கள்.

**(ஆதாரம் - அபூதாவூத்.)**

திர்மிஜி, இப்னு மாஜா போன்ற கிரந்தங்களில் நபித்தோழர் ஹஜ்ரத் புரைதா ரலியல்லாஹு அன்ஹு அவர்களைக் கொண்டு ரிவாயத் பதியப்பட்டுள்ளது. ஈதுல் பித்தர் தொழுகைக்கு செல்லும் முன் ஏதாவது உண்டுவிட்டு செல்ல பெருமானார் கூறினார்கள். ஈதுல் அஜ்ஹா தொழுகை பக்ரீத் தொழுகை முடியாத வரை எதையும் உண்ணமாட்டார்கள்.

புகாரி ஷரீஃபில் ஒரு ஹதீஸில் ஹஜ்ரத் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள் ஈதுல் பித்தர் அன்று நபிகள் கோமான் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சில பேரித்தம் பழங்களை உண்ட பின்தான் ரமலான் பெருநாள் தொழுகைக்கு செல்வார்கள் அப்பே ரித்தங்கனிகள் ஒற்றைப் படையில் இருக்கும்.

**பெருநாள் தொழுகை சட்டங்கள் :**

ஈத் பெருநாள் தொழுவது வாஜிப் ஆகும். வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகைக்கு எந்த ஷரத்துகள் உள்ளனவோ இந்த பெருநாள் தொழுகைக்கும் பொருந்தும். ஒரு சில மாற்றத்தைத் தவிர. இமாம் அபூ ஹனீஃபா விடத்தில் ஜும்மாவுக்கு குத்பா ஓதுதல் ஷரத்துகளில் ஒன்று என்றால் பெருநாளில் மிம்பரில் குத்பா ஓதுவது சுன்னத்தாகும்.

இரு பெருநாள் தொழுகை களுக்கும் பாங்கும் இல்லை, இகாமத்தும் இல்லை.

ஜும்மாவில் குத்பாவிற்கு பிறகு தொழுகை என்றால் ஈதுப் பெருநாட்களில் தொழுகைக்குப் பின் குத்பா. **ஆதாரம் : பதாவாயே ஆலம்கீரி.**

**ரமலான் ஈத் அன்று செய்ய வேண்டியது...**

1. முடி திருத்திக் கொள்வது.
2. நகங்கள் வெட்டுதல்.
3. மிஸ்வாக் செய்தல்.
4. குளித்தல்.
5. புத்தாடை அணிதல்.
6. அத்தர் நறுமணம் பூசிக் கொள்ளுதல்.
7. பஜர் தொழுகை மஹல்லா பள்ளிவாசலில் தொழுதல்.
8. ஈத்கா மைதானத்திற்கு தொழச் செல்லுதல்.
9. பித்ரா சதகா கொடுத்தல்.
10. ஈத்காவிற்கு நடந்து செல்லுதல்.
11. ஈத்துக்குச் செல்லும் முன் மூன்று, ஐந்து, ஏழு பேரித்தம் பழங்களை ஒற்றைப் படையில் உண்ணுதல்.
12. பேரித்தம் பழம் கிடைக்காத பட்சத்தில் ஏதாவது இனிப்பை உண்டுசெல்லுதல்.
13. ஈத்காவிற்கு ஒரு பாதை வழியாக சென்று மறு பாதை வழியாக திரும்புதல். இவை அனைத்தும் முஸ்தஹப் ஆன செயல்களாகும்.

★ ஈதுல் பித்தர் ரமலான் பெரு நாளன்று தொழுகைக்கு போகும் முன் ஏதும் உண்ணாமல் பருகாமல் செல்வது பாவமாகும்.

★ ஈத் பெருநாளன்று ஈத்காவின் மிம்பர் படிகட்டுகள் கட்டிக் கொள்வதோ, அல்லது செய்து எடுத்துச் செல்வதோ ஆகுமான காரியங்கள் ஆகும்.

**ஆதாரம் : ரத்துல் முக்தார்**

★ ஈத் பெருநாளன்று மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதும், நிறைய தான தருமங்கள் செய்வதும், பெருநாள் தொழுகைக்கு கண்களை தாழ்த்திய வண்ணம் கௌரவமாக நடந்து செல்வதும், அமைதியாக தக்பீர் முழக்கங்கள் கூறுவதும், தொழுகை முடிந்து கட்டித் தழுவி முபாரக்கான வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்வதும் முஸ்தஹப்பான காரியங்கள் என "துர்ருல் முக்தார்" என்னும் கிரந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சூரிய உதயத்திற்குப்பின் பெருநாள் தொழுகையின் நேரம் துவங்கி சூரிய உச்சிக்குமுன் பெருநாள் தொழுகை நேரம் முடிந்து விடுகிறது. ஈதுல் பித்தரில் (ரமலான்) தொழுகையை தாமதப்படுத்திக் கொள்வதும், பக்ரீத் பெருநாள் தொழுகையை குர்பானியை அனுசரித்து முற்படுத்திக் கொள்வதும் முஸ்தஹப்பதாகும்.

**பெருநாள் தொழுகையின் நிய்யத்தும் முறையும்:**

ஈதுல் பித்தரின் இரண்டு ரகாஅத் வாஜிபு தொழுகை 6 கூடுதலான தக்பீர்களுடன் கிப்லாவை முன்நோக்கி இந்த இமாமை பின்தொடர்ந்து அல்லாஹ்விற்காக தொழுகிறேன் என்று நிய்யத்து செய்ய வேண்டும்.

சஃப்பு கட்டி நின்ற பின் மேற் சென்னபடி நிய்யத்து செய்து முதல் இரண்டு தக்பீர்களில் கைகளை காது வரை உயர்த்தி விட்டு விட வேண்டும். மூன்றாம் தக்பீரில் எப்பொழுதும் போல் கையை கட்டிக் கொள்ள வேண்டும். முதல் ரக்அத்தை இமாமைப் பின்தொடர்ந்து வழக்கம் போல் முடிக்க வேண்டும்.

இரண்டாம் ரக்அத்தில் அல்ஹம் துலில்லாஹ் மற்றும் சூரா ஓதிய பின் ஒன்று, இரண்டு, மூன்று தக்பீர்களில் கைகளை காதுவரை உயர்த்தி விட்டு விட வேண்டும். நான்காவது தக்பீ ருக்கு ருகூவுக்குச் செல்ல வேண்டும். மீதி தொழுகையை இமாமைப் பின் தொடர்ந்து தொழுது கொள்ள வேண்டும்.

இமாம் குத்பாவில் துஆ ஓதும் போது, கைகளை ஏந்தக் கூடாது. அதே போல் நபிகள் கோமான் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் பெயர் வரும் போது மனதில் ஸலவாத்து ஓதிக் கொள்ள வேண்டும்.

இதே போல் சஹாபாக்கள் பெயர் வரும் போது ரலியல்லாஹு அன்ஹு என்று மனதில் ஓதிக் கொள்வதும் இமாம் அபூஹனீஃபாவிடத்தில் உள்ள சட்டங்களாகும்.

இமாம் ஷாஃபயீ அவர்களின் முறைப்படி பெருநாள் தொழுகையின் சட்ட திட்டங்களை அறிஞர் பெருமக் களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளும் படி பணிவாக விண்ணப்பித்துக் கொள்கிறோம்.

**பெண்கள் - பெருநாள் தொழுகை...**

எந்த தொழுகையையும் பெண்கள் பள்ளிக்குச் சென்று தொழக் கூடாது என்று நான்கு இமாம்க ளிடத்தில் இஜ்மா சட்டம் உள்ளது. ஜும்ஆ மற்றும் பெருநாள் தொழுகை பெண்கள் மீது விதிக்கப்பட வில்லை. எனவே பெண்கள் பள்ளிக்கோ ஈத்கா மைதானத்திற்கோ சென்று தொழுவது கூடவே கூடாது.

**நன்றி; சட்டத் தொகுப்புநூல்: பஹாரே ஷரீஅத், ஆசிரியர்: அல்லமா அம்ஜத் அலி சாஹிப்**

## தலைநகர் சென்னையில் ஹஜ்ரத் மூஸா ஷா காதிரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் உரூஸ் ஷரீஃப்...!

சென்னையின் இதயப் பகுதியான அண்ணா சாலையில் அமைந்துள்ள ஹஜ்ரத் சையத் மூஸா ஷா காதிரி வலியுல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் சந்தனக் குட உற்சவ விழா வழமையாக கொடியேற்ற வைபவத்துடன் தொடங்கி சீரோடும் சிறப்போடும் மூன்று நாட்கள் நடைபெற்றது. முதல் நாளான 28.09.2010 சந்தனக் குடம் தாபூத் என்ற சந்தன பேழையில் அலங்கரித்து ஊர்வலமாக தர்காவில் இருந்து புறப்பட்டு இரவு மாநகரை வலம் வந்து அதிகாலை ஃபஜர் தொழுகைக்கு முன் தர்காவை வந்தடைந்து அமைதியாக ஃபாத்திஹா ஓதி சந்தனம் பூசப்பட்டது.

இரண்டாம் நாளான 29.09.2010 உலமாக்களின் சிறப்பு பயான்களும், மௌலூது கஸீதாக்களும் நடைபெற்றன. நபிகள் நாயகம் வழியில் ஜியாரத்துகள் என்ற தலைப்பில் மௌலானா மௌலவி ஹாபிஸ் காரி சையத் ஜமீல் அக்தர் ரப்பானி ஹஜ்ரத் அவர்கள் பயான் செய்தார்கள். மூன்றாம் நாள் நிகழ்வாக 30.09.2010 கவ்வாலிகள் என்கிற இஸ்லாமிய ஆன்மிக இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இம்மூன்று நாள் நிகழ்ச்சிகளிலும் ஜாதி மத பேதமின்றி ஏழை பணக்காரர் என்ற வித்தியாசம் பாராமலும், எல்லா சமூக மக்களும் ஒற்றுமையுடனும் அமைதியுடனும் கலந்து கொண்டு மேன்மை மிக்க மஹான் அவர்களின் துஆ பரக்கத்தான நல் ஆசியைப் பெற்றார்கள்.



ஹஜ்ரத் மூஸா ஷா காதிரி அவர்களின் தர்கா ஷரீஃப், மவுண்ட் ரோடு - சென்னை

தர்கா உரூஸின் மின்விளக்கு அலங்காரங்கரிப்பால் சிங்கார சென்னையின் அந்த வளாகம் ஜெக ஜோதியாய் காட்சியளித்தது. இந்த ஏற்பாடுகளை தர்காவின் தர்மகர்த்தாக்களான ஜனாபாக்கள், சஹாரா பீ, காலம் சென்ற காதர் ஷரீஃப் அவர்களின் துணைவியார் மற்றும் மகள்களான ரஷீதுன்னிஸா ஷம்ஷாத் பேகம், தில்ஷாத் பேகம், முனீரா பேகம், நஜ்முன்னிஸா பேகம், ஆகியோர் ஆலி ஜனாப் சையத் முயீனுத்தீன் சாஹிப் முன்னிலையில் எல்லா ஏற்பாடுகளும் நன்றாய் அமைந்திருந்தன. எல்லா நிகழ்ச்சிகளுக்கும் மிக நல்ல முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திருந்த மாநகர காவல் துறைக்கு என்றென்றும் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

**நமது சென்னை நிருபர் : சையத் அப்துல் காதர் (எ) அஜீஸ்**

## ஜமாஅத்தே இஸ்லாமியின் கொள்கைகள் வஹ்ஹாபிய தீவிரவாதக் கொள்கைகளே...!

### 24 ஆயிரம் பள்ளிவாசல், நூலகங்களிலிருந்து ஜமாஅத்தே இஸ்லாமியை நிறுவிய அபுல் ஆலா மௌதூதியின் நூல்களை வெளியேற்ற பங்களாதேஷ் நாட்டு அரசாங்கம் அதிரடி ஆணை...

சற்றேரக்குறைய அரை நூற்றாண்டுக்கும் மேலாக ஜமாஅத்தே இஸ்லாமி என்ற ஒரு இயக்கம் அதன் நிறுவனர் மௌலானா மௌதூதி என்பவரால் நிறுவப்பட்டு இஸ்லாத்தில் பல குழப்பங்களை உண்டாக்கி வஹ்ஹாபியத்தை போதித்து நபிமார்கள் சஹாபாக்கள் அத்தனை பேர்கள் மீதும் இல்லாததும் பொல்லாததுமாக இட்டுகட்டி இஸ்லாத்தின் ஆணிவேரான கலிமாவுக்கே தவறான அர்த்தம் கற்பித்து வெள்ளை ஏகாதிபத்தியத்தின் அடிவருடியாய் துளிர் விட்டு முளைத்த போது இந்திய துணை கண்டத்தின் அனைத்து அஹ்லே சுன்னத் வல் ஜமாஅத் உலமா பெருமக்களும் இது இஸ்லாத்திற்கு அப்பாற்பட்ட இயக்கம் என்று ஃபத்வா வழங்கியபோதெல்லாம் ஆங்கிலம் மெத்தப் படித்த மேதாவிகளும், வஹ்ஹாபிய ஆலிம்களும், மௌலானா மௌதூதியின் எழுத்து நடையையும் உருது இலக்கிய ஆளுமையையும் ஆஹா! ஓஹோ என்று புகழ்ந்து தள்ளினார்கள்.

சுன்னத் வல் ஜமாஅத் உலமாக்கள் கொடுத்த ஃபத்வாக்களையெல்லாம் ஏளனமும் பரிகாசமும் செய்தார்கள். ஆனால் ஐம்பது ஆண்டுகள் கடந்து பங்களா தேஷ் நாட்டில் மௌதூதியின் கொள்கைகள், நூல்கள் இஸ்லாத்திற்கு எதிரானவை என்றும் தீவிரவாதத்தையும், இஸ்லாத்தின் மீது தவறான கருத்துக்களையும் போதிக்கின்றன என்பதை உணர்ந்து இருபத்தைந் தாயிரம் அரசு நூலகங்கள் பள்ளிவாசல் களிலிருந்து மௌதூதியின் அனைத்து நூட்களை பங்களா தேஷ் அரசு வெளியேற்றிவிட வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ள சுருக்கத்தை தான் கீழேதந்துள்ளோம். மறுப்பு தெரிவித்தோரை அரசு கண்டுகொள்ளவில்லை.

தேவ்பந்தி தப்லீக் ஜமாஅத்தின் செயல்பாடுகளுக்கும் வஹ்ஹாபிய தீவிரவாதத்தை போதிப்பதே என்று மிக விரைவில் அறிவிப்பு வரும் என்று நம்புவோமாக.

## Maududi's books banned in Bangladesh

DHAKA, July 16: The Bangladeshi government has ordered mosques and libraries across the country to remove all books written by Syed Abul Ala Maududi, the founder of Jamaat-i-Islami.

According to BBC, the chief of the government-funded Islamic Foundation said the books by Maulana Maududi encouraged "militancy and terrorism".

Books by Maulana Maududi, who died in 1979, are essential reading for supporters of the Jamaat-i-Islami.

Born in India, the Pakistani scholar is considered to be a prominent theorist of Islam in modern South Asian history. But Bangladeshi officials say his writings promot e radicalism and his ideological goal was to capture power in the name of Islam.

"His writings are against the peaceful ideology of Islam. So, it is not correct to keep books of Mr Maududi in mosques," Islamic Foundation director-general Shamim Mohammad Afjal told the BBC.

The government has now ordered nearly 24,000 libraries attached to mosques to remove his books immediately.

**Thanks to www.dawn.com**

see for more refrance
http://www.dawn.com/wps/wcm/connect/dawn-content-library/dawn/the-newspaper/front-page/maududis-books-banned-in-bangladesh-770